# இலங்கையின் சுதந்திர நாள் தமிழர்களுக்கு கரி தினம்!

**புறக்கணிக்க யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம் அழைப்பு**




02 பக்கம்


Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 155 சுபகிருது வருடம், தை மாதம் 11ஆம் திகதி புதன்கிழமை (25.01.2023) ஹிஜ்ரி 1444, ஜமா அதுல் ரஜப் - 02, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.60


## உஷ்



கிழக்கு மாகாணத்திற்கு முஸ்லிம் அரசியல் பிரமுகர் ஒருவரை ஆளுநராக்க அரச மேல் மட்டத்தில் ஆராயப்படுகிறது.

இதனால் அந்த அரசியல் பிரமுகர் அங்கம் வகிக்கும் கட்சியின் ஆதரவை அரசுக்கு பெறுவது நோக்கமாம்.விரைவில் அறிவிப்பு வருமாம்.

# சந்தியா எக்னெலிகொட

## மோதரை காளி கோயிலில் சத்தியாக்கிரகம்



சிரேஷ்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமலாக்கப்பட்டு 13 வருடங்கள் நிறைவடைந்துள்ள நிலையில், அவருக்கான நீதியை நிலைநாட்டுவதற்காக வேண்டுதல் முன்வைத்து அவரின் பாரியார் சந்தியா எக்னெலிகொட மோதரை, காளி கோயிலுக்கு முன்னால் நேற்று (24) அனுஷ்டான சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டார்.

இதன்போது,"எனக்கு முழுமையான நீதியை நீங்கள் பெற்றுக்கொடுக்கும்வரை உங்களை நாடி வரமாட்டேன். இந்த நாட்டிலிருக்கும் குற்றவாளிகளுக்கு... 02 பக்கம்

# வேட்பாளர் ஒருவருக்கு நூற்றுக்கு 60 சதவீதமே செலவிட முடியும்!

**அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் ஆணைக்குழு திட்டவட்டமாக அறிவிப்பு**

நா . தினுஷா

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக, அரசியல் கட்சியொன்று வாக்காளர் ஒருவருக்கு 15 ரூபாவே செலவிட முடியும் என்றும் அதற்கமைய, அரசியல் கட்சியொன்று வேட்பாளர் ஒருவருக்காக நூற்றுக்கு 60 சதவீதமே செலவிட முடியுமென்றும் அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் ஆணைக்குழு திட்டவட்டமாக அறிவித்துள்ளது. 02 பக்கம்

# தேர்தலை ஒத்திவைக்க அரசின் புதிய முயற்சி!



## அம்பலப்படுத்தும் சஜித் பிரேமதாச

02 பக்கம்

# அரசில் இருந்தோர் தனி கூட்டணியாக செயற்படுவது சவாலான விடயமே

**சொல்கிறார் பெசில் ராஜபக்ஷ**




''கட்சி உறுப்பினர்கள் விலகிச்சென்று ஏனைய கட்சிகளுடன் இணைவது அரசியலில் இயல்பான விடயமாகும். இருந்தாலும், பொதுஜன பெரமுன கட்சியிலிருந்த உறுப்பினர்கள் அதிலிருந்து விலகிச் சென்று, ஏனைய தரப்பினருடன் இணைந்து தனி கூட்டணியாக செயற்படுவது எங்களுக்கு சவாலான விடயமாகும். அந்த சவால்களை எதிர்கொண்டேயாகவேண்டும்'' - என்று பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகரும் தேசிய ஒருங்கிணைப்பாளருமான பெசில் ராஜபக்ஷ தெரிவித்தார். 02 பக்கம்

# மேஜர் அஜித் பிரசன்னவுக்கு 4 வருட சிறைத்தண்டனை



ஓய்வுபெற்ற மேஜர் அஜித் பிரசன்னவுக்கு 04 வருட கடூழிய சிறைத்தண்டனை மற்றும் 03 இலட்சம் ரூபா அபராதம் விதித்து உயர்நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டில் இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

# உள்ளூராட்சி மன்றப் பிரதானிகள் பொதுச் சொத்துகளை தவறாகப் பயன்படுத்தல்



**தேர்தல் ஆணைக்குழுவிடம் ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டு**

உள்ளூராட்சி மன்றப் பிரதானிகள் பொதுச் சொத்துகளைத் தவறாகப் பயன்படுத்துதல் தொடர்பாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார,... 02 பக்கம்

## கமெண்ட் கந்தர்...

அது, இது எண்டு கோல்மால் பண்ணிப்போட்டு, கடைசியா தேர்தலே வேணாமய்யா என்று மக்களையே சொல்ல வச்சிடுவாங்கள் போல...



# கொழும்பு தேசிய வைத்தியசாலையில் மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாடு



நாடளாவிய ரீதியில் வைத்தியசாலைகளில் மருந்துப் பொருட்களுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. 02 பக்கம்

# மின் கட்டணத் திருத்தத்திற்கு பொதுப் பயன்பாடு ஆணைக்குழு இணக்கம்



2009ஆம் ஆண்டு மின்சக்தி சட்டத்திற்கமைய கோரப்பட்டுள்ள மின் கட்டணத் திருத்தத்திற்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ஏகமனதாக இணக்கம் தெரிவித்துள்ளது.

அமைச்சரவையால் அனுமதி வழங்கப்பட்டுள்ள மின் கட்டணத் திருத்தத்தின் ஏனைய விடயங்கள் தொடர்பில் சட்ட ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை... 02 பக்கம்

# வரிக் கொள்கையில் இப்போதைக்கு திருத்தங்களை மேற்கொள்ள முடியாது

**அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்தன அறிவிப்பு**




எமது நாட்டின் பொருளாதாரம் மரணத்தின் விளிம்பில் இருக்கிறது. கடன் உதவிக்கான ஒப்பந்தத்தில் சர்வதேச நாணய நிதியம் கைச்சாத்திடாவிட்டால் நாட்டில் எதிர்காலமொன்று இல்லாமல்போய்விடும். அவர்கள் எமக்கு விதித்துள்ள விதிமுறைகளை நடைமுறைப்படுத்தியே ஆகவேண்டும். 02 பக்கம்

# இந்திய படகுகளுக்கு எதிரான கடற்படை நடவடிக்கை விரிவுபடுத்தப்பட வேண்டும்

**அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு**



02 பக்கம்

## மின் கட்டண அதிகரிப்புக்கு எதிராக எழுத்தாணை மனு

ஜனவரி முதலாம் திகதி முதல் மின் கட்டணத்தை அதிகரிக்கும் அமைச்சரவையின் தீர்மானத்தை செல்லுபடியற்றதாக்குமாறு கோரி, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எழுத்தாணை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மின் பாவனையாளர்கள் சங்கம், அதன் செயலாளர் சஞ்சீவ தம்மிக்க, சுற்றுச்சூழல் நீதிக்கான மத்திய நிலையத்தின் நிறைவேற்று பணிப்பாளர் ஹேமந்த விதானகே மற்றும் சுற்றுச்சூழல் நீதிக்கான மத்திய நிலையம் உள்ளிட்ட அமைப்புகள் மற்றும் தனிநபர்கள் இந்த எழுத்தாணை மனுவை தாக்கல் செய்துள்ளனர். மனுக்களின் பிரதிவாதிகளாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர், இலங்கை மின்சார சபை, அமைச்சரவையின் அனைத்து உறுப்பினர்களும் பெயரிடப்பட்டுள்ளனர்.

மின் கட்டணத்தை இந்த சந்தர்ப்பத்தில் மீண்டும் அதிகரிக்க வேண்டாம் என பொது பயன்பாடுகள் ஆணைக்குழு ஆலோசனை வழங்கியிருந்த போதிலும், அதனை கருத்திற்கொள்ளாது, அமைச்சரவை குறித்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாக மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த தீர்மானம் சட்டவிரோதமானது எனவும் சுயாதீன ஆணைக்குழுவான பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிற்கு அழுத்தம் விடுப்பதற்கான அதிகாரம் பிரதிவாதிகளுக்கு கிடையாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் அவசரமான விடயமாக இதனை கருத்திற்கொண்டு, இந்த மனுவை எதிர்வரும் 27 ஆம் திகதி திறந்த நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள அனுமதி வழங்குமாறும், மனுதாரர்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## தேர்தலை நடத்தக்கோரி முஜிபுர் மனுத்தாக்கல்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் உடனடியாக எடுக்க வேண்டும் என்று கோரி ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுத் தாக்கல் செய்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் இந்த மனுவில் அமைச்சரவை செயலாளர் மற்றும் சிலர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கு 10 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதையும் மீறி மாவட்ட செயலாளர்களுக்கு வேட்புமனுக்களை ஏற்க வேண்டாம் என பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் அறிவித்திருப்பது சட்ட விரோதம். அந்த கடிதம் தேர்தலை நடத்த தடையாக உள்ளது என்று அந்த அடிப்படை உரிமை மீறல் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, தனது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக அறிவித்து, இந்த மனுவை விசாரணைக்கு அனுமதித்து, உள்ளூராட்சி தேர்தலை நடத்த உத்தரவிட வேண்டும் என மனுதாரர் தனது மனுவில் கோரியுள்ளார்.

## பரீட்சைக்கால மின் துண்டிப்பு

## மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணை

உயர்தரப் பரீட்சைக் காலத்தில் மின்சாரத்தை துண்டிக்காமல் இருக்க நடவடிக்கை எடுக்குமாறு வழங்கப்பட்ட ஆலோசனையை நடைமுறைப்படுத்தாமை தொடர்பில் விசாரணைகளை ஆரம்பிக்க மனித உரிமைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. எனவே, இன்று (25) காலை 10.30 மணிக்கு ஆணைக்குழுவில் நடைபெறும் விசாரணைகளில் கலந்துகொள்ளுமாறு மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர், பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஆகியோருக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

### இந்தியப் படகுகளுக்கு...

இந்திய கடற்றொழிலாளர்களின் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்துமாறு தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடற்றொழில் மாவட்டங்கள் அனைத்திலும் பாதுகாப்பு பொறிமுறையொன்றை உடன் அமுலுக்கு வரும் வகையில் செயற்படுத்துமாறும் தெரிவித்துள்ளார்.

இந்தியக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறலை பூரணமாக கட்டுப்படுத்துவது தொடர்பாக கடற்படை மற்றும் சம்பந்தப்பட்ட கடற்றொழில் அதிகாரிகளுடன் நேற்று நடைபெற்ற விசேட கலந்துரையாடலின் போதே கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்ற குறுகிய அரசியல் நோக்கங்கொண்டவர்களினால் இந்திய கடற்றொழிலாளர்களின் விவகாரத்தை தவறாக பயன்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் நாடுகளுக்கிடையேயான அசௌகரியங்களை உருவாக்கக்கூடிய எந்தவிதமான செயற்பாடுகளையும் அனுமதிக்க முடியாதென அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

மேலும், நூற்றுக்கணக்கான இந்திய இழுவைப் படகுகள் எமது கடற் பரப்பிற்கு வருகின்ற நிலையில், கடற்படையினரின் நடவடிக்கை போதுமானதாக இல்லை எனவும் கடற்றொழில் அமைச்சர் தெரிவித்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த கடற்படை அதிகாரி, சீரற்ற காலநிலை போன்ற காரணங்களினால் கடந்த மாதங்களில் கடற்படை செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இருந்ததாகவும் எதிர்வரும் வாரங்களில் நடவடிக்கை விரைவுபடுத்தப்படும் எனவும் உறுதியளித்தார்.

மேலும், உள்ளூர் கடற்றொழிலாளர்களினால் மேற்கொள்ளப்படும் அனைத்து சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்துவதுடன் கடத்தல் நடவடிக்கைகளில் கடற்றொழிலாளர்கள் சம்பந்தப்படுவதையும் கட்டுப்படுத்த வேண்டியிருக்கின்றது. எனவே, கடற்றொழில் மாவட்டங்கள் தோறும் ஆலோசனைக் குழுக்களை நியமிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

இக்குழுக்களில் கடற்றொழில் அமைச்சின் உயரதிகாரிகள், கடற்படையின் உயரதிகாரிகள் மற்றும் கடற்றொழில் சம்மேளனப் பிரதிநிதிகளை இக்குழுவில் உள்ளடக்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### உள்ளூராட்சி மன்ற...

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார். அதில் அவர் கூறியுள்ளதாவது,

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் கையளிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில், வேட்புமனுக்களை கையளித்த உள்ளூராட்சி மன்றங்களின் பிரதானிகள் உள்ளூராட்சி மன்றங்களின் உத்தியோகபூர்வ வாகனங்கள் மற்றும் ஏனைய வளங்களை தொடர்ந்து பயன்படுத்துவதை நாம் அவதானித்துள்ளோம்.

இது தேர்தல்கள் சட்டத்திற்கு உட்பட்டதல்ல என்பது போலவே ஏனைய வேட்பாளர்களுக்கு இது கடுமையான பாதகமாகவும் அமைந்துள்ளது. இதனை தடுத்து நிறுத்த தாமதமின்றி தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு தயவு செய்து தெரிவித்துக் கொள்கிறேன் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் பிரதிகள் தேர்தல் ஆணையாளர் நாயகம் மற்றும் சகல தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

### மின் கட்டண திருத்தத்திற்கு...

எடுக்கப்படுமென ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இந்தத் தீர்மானமானது தமது ஆணைக்குழுவின் அனைத்து உறுப்பினர்களினாலும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானம் என அவர் மேலும் கூறியுள்ளார்.

மின் கட்டணத்தை 65 முதல் 70 சதவீதம் வரை அதிகரிப்பதற்கு அமைச்சரவை அண்மையில் தீர்மானித்தது.

இந்த தீர்மானம் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து அமுலுக்கு வருமெனவும் அமைச்சரவை குறிப்பிட்டிருந்தது.

எவ்வாறாயினும், இவ்வாறு மின் கட்டண அதிகரிப்பிற்கான அனுமதியை வழங்க முடியாதென பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் தொடர்ச்சியாக சுட்டிக் காட்டப்பட்டது. எனினும், மின்சார சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மின் கட்டணத் திருத்தம் தொடர்பான கணக்கீடுகளை மேற்கொள்ளவுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

### கொழும்பு தேசிய...

நாடளாவிய ரீதியில் பல வைத்தியசாலைகளில் நீரிழிவு நோயாளர்களுக்கு வழங்கப்படும் மருந்துகள் உட்பட பல வகையான மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக சங்கத்தின் செயலாளர் மருத்துவர் ஹரித அளுத்கே கூறுகிறார்.

தொலைதூர வைத்தியசாலைகளில் மட்டுமன்றி கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் மருந்து தட்டுப்பாடு காணப்படுவதாகவும் இதனால் நோயாளர்கள் கடும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அரசாங்கம் தீர்வை வழங்காவிடின் உலக சுகாதார ஸ்தாபனத்தில் முறைப்பாடு செய்யவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

### சந்தியா எக்னெலிகொட...

தண்டனை பெற்றுக்கொடுத்து நீதி நிலைநாட்டப்படும் நாளன்று உங்களின் காலடியில் விழுந்து பூஜை செய்வேன்" என்று காளி கடவுளிடம் சந்தியா எக்னெலிகொட வேண்டுதல் முன்வைத்தார். அவர் தொடர்ந்து கூறியதாவது,

"காளி கடவுளே! சந்தியா எக்னலிகொடவாகிய நான் உங்களிடம் கோரிய விடயம் முழுமை யாக நிறைவேறவில்லை. எனக்கு முழுமையான நீதியை நீங்கள் பெற்றுக்கொடுக்கும் வரை நான் உங்களை நாடிவர மாட்டேன். பிரகீத் எக்னெலிகொட காணாமலாக்கப்பட்டு 13 வருடங்கள் நிறைவடைகின்றன. ராஜபக்ஷக்களுக்கு மே 09ஆம் திகதி எச்சரிக்கையாக மாறியதுபோன்று இந்த 13 ஆவது வருடமும் எச்சரிக்கையாக வேண்டும். இந்த வருடம் நிறைவடைவதற்கு முன்னர் எனக்கு நீதி கிடைக்க வேண்டும்.

நான் கேட்ட அநேகமானவற்றை எனக்கு பெற்றுக்கொடுத்திருக்கிறீர்கள். இந்த அரசாங்கத்தை நாட்டு மக்கள் துரத்தியடித்தது உண்மை என்றால், அது உங்களின் சக்தி என்றால் நான் இன்று உங்களிடம் முன்வைக்கும் வேண்டுதலையும் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும்.

இந்த நாட்டிலிருக்கும் குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுக்கொடுத்து நீதியை நிலைநாட்டப்படும் நாளன்று உங்களின் காலடியில் விழுந்து பூஜை செய்து எனது தலைமுடியை வளர்க்க ஆரம்பிப்பேன். ஒரு வருடமாக உங்களின் பெயரில் எனது தலைமுடியை தானம் செய்திருக்கிறேன்" என்று வேண்டுதல் முன்வைத்தார்.



## கடன் வட்டியை அதிகரிக்கும் தீர்மானம் இடைநிறுத்தம்

### மக்கள் வங்கி அறிவிப்பு

கடன் வட்டியை அதிகரிக்கும் தீர்மானத்தை தற்காலிகமாக இடைநிறுத்துவதாக மக்கள் வங்கி அறிவித்துள்ளது.

வாடிக்கையாளர்களின் கோரிக்கைகளை ஆராய்ந்து இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மக்கள் வங்கியின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

முன்னதாக மக்கள் வங்கியினால் வழங்கப்பட்டிருந்த கடன்களுக்கான வட்டி வீதம் ஜனவரி முதலாம் திகதி முதல் அமுலாகும் வகையில் 15.5 வீதம் வரை அதிகரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### தேர்தலை ஒத்திவைக்க...

பல மாதங்களாக இந்நாட்டின் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சரவை மற்றும் அரசாங்கத்துடன் தொடர்புடைய தரப்புகளால் உள்ளூராட்சி மன்றத் தேர்தலைத் தடுக்கவும், சீர்குலைக்கவும் பெரும் சதியில் ஈடுபட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சாடினார்.

ஒரு கட்டத்தில் செயலாளர் ஹபுஹின்ன ஊடாக அமைச்சரவை மேற்கொண்டதாக பொய்யான தீர்மானங்கள்,மோசடித் தீர்மானங்கள் எடுக்கப்பட்டு வேட்பாளர்களின் கட்டுப்பணத்தை ஏற்காதிருக்கும் துரோக நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும், மற்றுமொரு சந்தர்ப்பத்தில் திறைசேரியின் செயலாளர் மூலம் தேர்தலுக்கான பணத்தை வழங்க முடியாது என்றும், அரசாங்கத்திடம் பணமில்லை என்றும், சமூக நலப்பணிகள் உட்பட சம்பளம் வழங்குவதற்குக் கூட முடியாது என தெரிவிக்கப்பட்டதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

இந்த தேர்தலை சீர்குலைக்கும் புதிய நடவடிக்கையாக நாளை, அரசியலமைப்பு பேரவையின் ஊடாக தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களை மாற்றியமைத்து தேர்தல் ஆணைக்குழுவை சீர்குலைக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், மக்களின் இறையாண்மையில் கை வைத்தால் அதற்கு வழங்கும் தண்டனை நாட்டின் சட்டப்புத்தகங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதால் ஹபுஹின்ன சூட்சமம் மற்றும் திறைசேரி செயலாளர் ஊடாக மக்கள் இறையாண்மையை நாசம் செய்யும் முயற்சிகளுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி நீதிமன்றம் செல்லும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று (24) தெரிவித்தார்.

#### அரசாங்கம் புதிய சூட்சுமத்திற்குத் தயாராகிறது

எதிர்வரும் மார்ச் மாதம் 9ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தலை சீர்குலைக்க அரசியலமைப்பு பேரவை கூட்டத்தை பயன்படுத்தினால், நாட்டு மக்களின் வாக்குரிமையை பாதுகாக்கும் வகையில் அந்த சூட்சும நடவடிக்கையை நிச்சயமாக தோற்கடிப்பதுடன் அதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

#### தேர்தலை ஒத்திவைக்கும் சதிகள் வேண்டாம்

அதேபோல், நாளை கூடும் அரசியலமைப்பு பேரவைக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் தேர்தலை ஒத்திவைக்கும் சதித்திட்டங்களைச் சேர்க்க வேண்டாம் என்றும், சுயாதீனமான தேர்தல் ஆணைக்குழு பிரதிநிதிகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் எதையும் செய்யக் கூடாது என்றும் அரசியலமைப்பு பேரவையின் பொறுப்பு வாய்ந்த பிரதிநிதிகளுக்கு எச்சரிக்கை விடுப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்களை பாதுகாக்க ஐக்கிய மக்கள் சக்தி தயாராக இருப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் என்ற ரீதியில் இந்நாட்டில் மக்களின் இறையாண்மையை கெடுக்கும் சகல சதிகளையும் முறியடிக்க தலைமைத்துவம் வழங்குவதாகவும், மக்களின் வாக்குரிமையை பாதுகாக்க எந்நேரத்திலும் முன்வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

#### அன்று வேண்டாம், இன்று வேண்டும்

தேர்தல் அவசியம் என அன்று தான் கூறிய போது சேறுபூசும் விதமாக குரல் எழுப்பியவர்கள் தற்போது தேர்தலை நடத்துமாறு கோருவதாகவும், அரசாங்கத்தின் தேர்தலை ஒத்திவைக்கும் அனைத்து முயற்சிகளையும் தோற்கடிக்க தலைமைத்துவம் வழங்குவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேலும் தெரிவித்தார்.

### இலங்கையின் சுதந்திர நாள்...

யாழ்.நிருபர்

இலங்கையின் சுதந்திர நாள் தமிழர்களுக்கு கரி தினம் என தெரிவித்த யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் பெப்ரவரி 4ஆம் திகதி தமிழர் தாயகம் எங்கும் சிங்கள தேசத்தின் சுதந்திர தினத்தை புறக்கணித்து மக்கள் எழுச்சிப் பேரணியில் ஒன்றுகூடுமாறு அழைப்பு விடுத்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்று நடந்த ஊடக சந்திப்பிலேயே இதற்கான அழைப்பு விடுக்கப்பட்டது. இதன்போது கருத்து தெரிவித்த பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர்,

ஆங்கிலேயரிடம் இருந்து இலங்கை சுதந்திரம் அடைந்திருந்தாலும் தமிழ் மக்களாகிய எமக்கு இன்னமும் சுதந்திரம் கிடைக்கவில்லை. சிங்கள பேரினவாத அரசின் திட்டமிடப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகள் தொடர்வதால் பெப்ரவரி 4ஆம் திகதியை காலம் காலமாக தமிழர்கள் கரிநாளாக தான் அனுஷ்டித்து வருகிறோம்.

தமிழர் தாயகப்பகுதிகளில் மக்களின் பூர்வீகக் காணிகள் அபகரிப்பு, பௌத்தமயமாக்கல் என்பன இன்று வரை புதிய புதிய வடிவங்களில் தொடர்கின்றன. போர் முடிந்து 14 ஆண்டுகள் கழிந்தும் பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படவில்லை, தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவில்லை, தமிழினப் படுகொலைக்கான நீதி கிடைக்கவில்லை, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் அரசு பொறுப்புக் கூறவில்லை. தமிழ் மக்களையும் சர்வதேசத்தையும் இலங்கை அரசு ஏமாற்றி வருகிறது.

அரச படைகளால் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை தேடி வருடக்கணக்காக போராடி வருகிறார்கள், தமிழ் அரசியல் கைதிகள் 10 வருடங்களுக்கு மேலாக தமது விடுதலையை எதிர்பார்த்து சிறையில் வாடுகிறார்கள், தமது பூர்வீக நிலங்களை பறிகொடுத்துவிட்டு இன்றுவரை வீதியில் போராடி வருகிறார்கள், தமிழர் பகுதிகளில் தமிழருக்கு அனுமதி வழங்காமல் சிங்கள குடியேற்றங்களுக்கு அனுமதி வழங்குகிறார்கள், தமது உரிமைகளுக்காக போராடும் மக்கள் கைதுசெய்யப்பட்டு அச்சுறுத்தப்படுகிறார்கள். இவ்வாறு தமிழர் தாயகத்தில் தமிழ் மக்களின் இருப்பு தற்போது கேள்விக்குறியாகியுள்ள நிலையில், இந்த சுதந்திர நாளை நாம் கரிநாளாக பிரகடனப்படுத்தி எமது எதிர்ப்பை இந்த அரசுக்கும் தெரிவிப்பதுடன் சர்வதேசத்துக்கு தமிழ் மக்களின் உண்மை நிலையை உரத்துக்கூற வேண்டும்.

அந்த வகையில், மாணவர்களாகிய நாம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி பாரிய மக்கள் எழுச்சிப் பேரணி ஒன்றை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளோம். அதற்கு கட்சி பேதங்களை கடந்து சகல தரப்பினரின் ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கிறோம். எமது உரிமைகளை நாம் விட்டுக்கொடுக்காமல் எமது இருப்பை உறுதி செய்வதற்கு நாம் போராட வேண்டும். ஆகவே பெப்ரவரி 4ஆம் திகதி தமிழர் தாயகம் எங்கும் சிங்கள தேசத்தின் சுதந்திர தினத்தை புறக்கணித்து இந்த மக்கள் எழுச்சிப் பயணத்தில் எம்முடன் ஒன்றுகூடுமாறு கேட்டுக்கொள்கிறோம் என்றனர்.

### வேட்பாளர் ஒருவருக்கு...

தேர்தல் செலவின ஒழுங்குப்படுத்தல் தொடர்பான வர்த்தமானியை எதிர்வரும் ஒருசில தினங்களில் வெளியிட எதிர்பார்த்துள்ளதாகவும் தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பிலான அரசியல் கட்சிகளுடனான விசேட கலந்துரையாடல் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தலைமையில் ஆணைக்குழுவின் அலுவலகத்தில் நேற்று (24) இடம்பெற்றது.

இதன்போதே ஆணைக்குழு கட்சிகளுக்கு இந்த விடயத்தை அறிவித்திருக்கிறது.

ஒரு வாக்காளருக்கு 15 ரூபா என்ற அடிப்படையில், 15 ரூபாவை ஒரு தேர்தல் தொகுதியில் இருக்கும் மக்களின் எண்ணிக்கையில் பெருக்கி வரும் தொகையையே செலவளிக்க முடியும். அதில் 60 சதவீதம் கட்சியினால் செலவளிக்க முடியும். சராசரியாக வாக்காளர் ஒருவருக்காக 7 – 8 ரூபா வரையில் ஒரு கட்சி செலவளிக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தேர்தல் ஆணைக்குழுவின் இந்த அறிவிப்புக்கு கலந்துரையாடலில் கலந்துகொண்ட சகல அரசியல் கட்சிகளும் இணக்கம் தெரிவித்துள்ளன. இந்நிலையில், இதனை நடைமுறைப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்கள் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஊழலற்ற ஜனநாயக ரீதியான தேர்தலொன்றை நடத்த அரசியல் கட்சிகள் ஒத்துழைக்க வேண்டும் என்றும் இதன்போது தேர்தல் ஆணைக்குழு கட்சிகளிடம் கோரிக்கை முன்வைத்திருக்கிறது.

இந்தக் கலந்துரையாடலில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர் நாலக்க கொடஹேவா உள்ளிட்ட அரசியல் கட்சிகளின் செயலாளர்களும் உறுப்பினர்களும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டிருந்தனர்.

### அரசில் இருந்தோர் தனி...

கட்சியின் தேர்தல் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக ஆசிர்வாதத்தை பெற்றுக்கொள்ளவதற்காக, நேற்று (24) கண்டி ஸ்ரீதலதா மாளிக்கைக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தார்.

வழிபாடுகளின் பின்னர் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அநேகமான தேர்தல் தொகுதிகளில் தனித்து போட்டியிடவே தீர்மானித்திருக்கிறோம். 252 உள்ளூராட்சி மன்றங்களில் நேரடியாக மொட்டுச் சின்னத்திலேயே போட்டியிடுகிறோம். யாழ்ப்பாணத்தில் வீணைச் சின்னம், கிழக்கில் படகு சின்னம் போன்ற மேலும் சில சின்னங்களில் போட்டியிடுகிறோம்.

தேர்தல் காலந்தாழ்த்தப்படும் என்று நாங்கள் நம்பவில்லை. தேர்தலில் போட்டியிட நாங்கள் தயாராகி வருகிறோம்.

கடந்த காலங்களில் வேட்பு மனுத் தாக்கல் செயற்பாடுகளும் காலந் தாழ்த்தப்படும் என்றே எதிர்பார்த்திருந்தோம். ஆனால் உரிய நேரத்தில் வேட்பு மனுத் தாக்கல் செய்வதற்கான திகதி அறிவிக்கப்பட்டிருந்தது.

உறுப்பினர்கள் ஒரு அரசியல் கட்சியிலிருந்து வெளியேறுவதும் தனியான கூட்டணிகள் அமைப்பதும், மீண்டும் வந்து இணைவதும் அரசியலில் இயல்பான விடயமாகும்.

பொதுஜன பெரமுனவிலிருந்து விலகிச் சென்று ஏனைய தரப்பினருடன் இணைவது கட்சிக்கு சவாலான விடயமே. இருந்தபோதும் அந்த சவால்களை எதிர்கொண்டே ஆகவேண்டும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு போதுமான நிதி இல்லை என்று கூறுகிறார்கள். ஆனால், இதற்கு முன்னர் 70 வருடங்களாக ஆட்சி செய்து தவறிழைத்தவர்களின் அரசாங்கங்களின் காரணமாகவே நாட்டில் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது என்பது அனைவரினதும் கருத்தாக இருக்கிறது. எனவே 70 வருடங்களாக நாங்கள் இந்த நாட்டை ஆட்சி செய்யவில்லை என்றார்.

### வரிக் கொள்கையில்...

ஆகவே, வரிக் கொள்கையில் இப்போதைக்கு திருத்தம் மேற்கொள்ள முடியாது என்று அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (24) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

தேர்தலை காலந்தாழ்த்துவது குறித்து அமைச்சரவை மட்டத்தில் எந்த பேச்சுவார்த்தையும் இடம்பெறவில்லை. தேர்தலில் போட்டியிடுவதற்கான சகல ஆயத்தங்களையும் மேற்கொண்டுள்ளோம்.

இருந்தபோதும் நாட்டில் தற்போது பாரதூரமான சவால் நிலைமையே நிலவுகிறது. வரலாற்றில் என்றும் சந்திக்காத இக்கட்டானவொரு நிலைமையை சந்தித்திருக்கிறோம்.

ஒருவேளை கடன் உதவித் திட்டத்துக்கான ஒப்பந்தத்தில், சர்வதேச நாணய நிதியம் கைச்சாத்திடாவிட்டால் நாட்டுக்கு எதிர்காலமொன்று இல்லாமல் போய்விடும். சர்வதேச மட்டத்தில் எந்தவொரு கொடுக்கல் வாங்கலையும் முன்னெடுக்க முடியாத நிலை ஏற்படும். சர்வதேச கொடுக்கல் வாங்கல்களுக்கான தொழில்நுட்ப வசதிகளை சர்வதேச நாணய நிதியமே பெற்றுக்கொடுக்கும். ஏற்றுமதி இறக்குமதி செயற்பாடுகளில், கடன் மீள் செலுத்துகை நடவடிக்கைகளில் பின்னடைவு ஏற்படும்போது அதற்கான உதவிகளை நாணய நிதியமே பெற்றுக் கொடுக்கிறது.

எனவே, நாணய நிதியம் கூறும் விடயங்களை நாங்கள் செயற்படுத்தாவிட்டால் எமக்கு எதிர்காலமொன்று இல்லாமல் போய்விடும். இந்த பிரச்சினைகளுக்கான தீர்வு அரசியல்வாதிகளிடம் இல்லை. அவ்வாறு தீர்வு இருக்குமாக இருந்தால், மக்களுக்கு பொய் கூறாமல் தன்னம்பிக்கையுள்ளவர்கள் ஆட்சி பொறுப்பை ஏற்கவேண்டும்.

எமக்கு கடன் வழங்கியுள்ள நாடுகள், அந்த நாட்டு மக்களின் வரிப்பணத்தை சேகரித்தே கடன் வழங்கியுள்ளன. நாம் அந்தக் கடனை முறையாக மீள் செலுத்தாவிட்டால் அந்த நாட்டு மக்கள் இந்த கடனில் ஒரு பங்கை ஏற்க நேரிடும். இவ்வாறு இருக்கையில் எதனையும் ஏற்றுக் கொள்ளாமல், அர்ப்பணிப்புச் செய்யாமல் மற்றைய நாடுகளிடம் எமது கடன் சுமையை ஒப்படைப்பது பொறுத்தமற்ற விடயமாகும். நடைமுறையில் இருப்பதை விட பாரதூரமான நெருக்கடிக்குள் இருக்கிறோம் என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கிடைத்ததும் வரி அறவீட்டு முறையில் திருத்தம் மேற்கொள்ளப்படும். கடன்களை மீள் செலுத்தக் கூடிய, வருமானத்தை ஈட்டும் ஒரு வழிமுறை இல்லாவிட்டால் கடன் மறுசீரமைப்பை மேற்கொள்ள முடியாதென்று சர்வதேச நாணய நிதியம் அறிவித்திருக்கிறது. அந்த வழிமுறையை அவர்களுக்கு காண்பிக்காவிட்டால் தற்போது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள நிதியும் கிடைக்காது. அந்த நிதி கிடைக்காவிட்டால் எமது நாட்டில் இடம்பெறும் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் முடியாது. அதனால், அரசியல்வாதிகள் உள்ளிட்ட அனைவரும் வரி செலுத்த வேண்டி ஏற்பட்டுள்ளது.

45 ஆயிரம் ரூபாவுக்கு அதிகமாக மாத வருமானம் பெறும் சகலரிடமிருந்தும் வரி அறவிட வேண்டும் என்றே நாணய நிதியம் பரிந்துரை செய்திருக்கிறது. இதுதொடர்பில் பரந்துபட்ட கலந்துரையாடல்களை முன்னெடுத்ததன் பின்னரே ஒரு இலட்சம் ரூபாவுக்கும் அதிக வருமானம் பெறுபவர்களிடமிருந்து வரி அறவிட தீர்மானிக்கப்பட்டது.

இந்த விவகாரத்தில் மூடிமறைக்க எதுவும் இல்லை. வரியை திருத்துவதற்கோ குறைக்கவோ நடவடிக்கை எடுத்தால் நாணய நிதியத்திடமிருந்து கிடைக்கவிருக்கும் பணம் எமக்கு கிடைக்காது. கடன்களை மீளச் செலுத்தி நாட்டின் நிலைமையை சீராக்க வேண்டுமெனில் இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்று சில விதிமுறைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. எமது நாட்டின் பொருளாதாரம் மரணத்தின் விளிம்பில் இருக்கிறது.

எனவே, நாணய நிதியத்தின் உதவியின்றி இரண்டு வாரங்களுக்கு மேல் எமது நாட்டை முன்னெடுப்பதற்கான யோசனைகளை யாராவது முன்வைத்தால் அதனை செவிமடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம் என்றார்.

## தினசரி பலாபலன்கள்

சுபகிருது வருடம் தை மாதம் 11ஆம் நாள் புதன்கிழமை

**மேஷம்** செலவுகளை கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ளுங்கள், தேவையற்ற பயணங்கள் வேண்டாம்.

**ரிஷபம்** நீங்கள் எதிர்பார்த்த உதவி உங்கள் நண்பர் மூலம் கிடைக்கும், போட்டிகளில் வெற்றி கிட்டும்.

**மிதுனம்** முயற்சி செய்த தொழில் வாய்ப்புகள் அமையும், குடும்பத்தில் மகிழ்ச்சி கூத்தாடும்.

**கடகம்** தந்தை மூலம் கவலைகள் ஏற்படும், பெரியோர்களில் கோபத்திற்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

**சிம்மம்** பயணங்களைக் குறைத்துக்கொள்வது நல்லது, திடீர் கோபத்தால் மனதில் அமைதி இருக்காது.

**கன்னி** உறவினர்களுடன் விருந்துண்டு மகிழ்வீர்கள், மனைவியால் நன்மையும் இலாபமும் உண்டு.

**துலாம்** பண வருவாய் திருப்திகரமாக அமையும், உடல் நோய்கள் தீரும்.

**விருச்சகம்** தன்னைப் பற்றியே தாழ்வாக நினைத்து வேதனைப்படுவது, வீணான மனக்கவலை.

**தனுசு** எதையும் துணிவுடன் செய்ய மாட்டீர்கள். மற்றவர்களை நம்புவதற்கு முன்னர் இரண்டு முறை யோசியுங்கள்.

**மகரம்** நினைத்த காரியத்தில் வெற்றிவாகை சூடுவீர்கள், குடும்பத்தில் மங்கள காரியங்கள் நடைபெறும்.

**கும்பம்** பணம் பொருள் நட்டம் ஏற்படும் நாள், வீண் வாக்குவாதங்களால் தொல்லைகள்.

**மீனம்** வீணான மனக்குழப்பங்கள் வேண்டாம், மற்றவர்களின் பிரச்சினைகளில் தலையிட வேண்டாம்.

திதி : சதுர்த்தி பி.ப. 12.34 வரை பின் பஞ்சமி தேய்பிறை
நட்சத்திரம் : அனுஷம் பி.ப 5.22 வரை பின் கேட்டை
யோகம் : அமிர்த–சித்த யோகம் (சுப காரியம் நன்மை)
வார சூலை : தென் மேற்குத் திசை நோக்கி சுப காரியம் கூடாது
நல்ல நேரம் : மு.ப. 9.33 – 10.33 மணி வரை
ராகு காலம் : 12.33 – 2.03 மணி வரை
எமகண்டம் : 8.03 – 9.33 மணி வரை
குளிகை : 11.03 – 12.33 மணி வரை
சந்திராஷ்டமம் : கடக, சிங்க ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்
விசேட தினம் : சதுர்த்தி விரதம்

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

# சர்வதேச நாணய நிதிய சீர்திருத்தங்களுக்கு இருதரப்பு ஆதரவை வழங்க உறுதிப்பாடு

## அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் தெரிவிப்பு





சர்வதேச நாணய நிதியத்தால் அறிவிக்கப்பட்டு இலங்கை மத்திய வங்கியால் நடைமுறைப்படுத்தப்படும் மறுசீரமைப்புகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதே அரசாங்க நிதி பற்றிய குழுவின் நோக்கமாகும் - என அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் ஹர்ஷ டி சில்வா நேற்று முன்தினம் (23) தெரிவித்தார்.

2023ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டிற்குள் சர்வதேச நாணய நிதியத்தின் முதலாவது தவணையைப் பெற்றுக்கொள்ள முடியும் என நம்புவதாக மத்திய வங்கி உறுதிப்படுத்தியதைத் தொடர்ந்தே அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளைப் பின்பற்றுவதற்கான பொறிமுறையை நடைமுறைப்படுத்தும்போது காணப்படும்




கடுமையான சமூகத் தாக்கங்கள் குறித்தும் அரசாங்க நிதி பற்றிய குழு வினவியது. பாதிக்கப்படக்கூடிய சமூகங்களுக்கு ஏற்படும் சமூகத் தாக்கம் குறித்து சர்வதேச நாணய நிதியம் எச்சரிக்கையாக இருப்பதாகவும், அந்த விளைவுகளை நிராகரிப்பதற்கு செலவின உச்சவரம்புகள் போன்ற சில பாதுகாப்புகளைப் பயன்படுத்தியிருப்பதாகவும் மத்திய வங்கி பதிலளித்தது.

வட்டி வீதங்களைக் கட்டுப்படுத்துவதால் சந்தையில் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகள் குறித்து குழு கேட்டபோது, தற்பொழுது நாட்டில் குறைந்துவரும் அந்நியச் செலாவணி மேலும் குறைவதைக் கட்டுப்படுத்தும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதை மத்திய வங்கி ஏற்றுக்கொண்டது. சர்வதேச நாணய நிதியத்திடமிருந்தான விரிவாக்கப்பட்ட நிதி வசதி (EFF) மூலம் பண உட்செலுத்தலை மேற்கொள்ள எதிர்பார்த்திருப்பதாகவும், வட்டி வீதங்கள் மீண்டும் தளர்த்தப்படலாம் என்றும், சந்தை மீண்டும் விரிவடைவதற்கான வாய்ப்புகள் கிடைக்கும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிதியுதவிக்கான மாற்றுவழிகள் பற்றி கேட்டபோது, சர்வதேச நாணய நிதியத்துடனான கூட்டாண்மை விடயம் இறுதிப்படுத்தப்படும்வரை எந்தவொரு சர்வதேச நிறுவனமும் கடன் முகாமைத்துவத்தில் இலங்கையுடன் கூட்டாண்மையை ஏற்படுத்தத் தயாரில்லை என மத்திய வங்கி வலியுறுத்தியது. சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கிடைக்கும் கடன் நடவடிக்கைகளினால் இலங்கையின் நம்பகத்தன்மை குறித்து சர்வதேச முகவர் நிலையங்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டு எதிர்காலத்தில் கடன்முகாமைத்துவம் உள்ளிட்ட எதிர்கால முயற்சிகளில் பங்காளர்களாக இணையலாம். இதனால்தான் கடன்பிணை விடயத்தில் இலங்கை இணைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய வங்கி வலியுறுத்துகிறது.

இதில் இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன், பாராளுமன்ற உறுப்பினர்களான அனுர பிரியதர்ஷன யாப்பா, ரவூப் ஹக்கீம், சந்திம வீரக்கொடி, ஹர்ஷன ராஜகருணா, விஜித ஹேரத், மயந்த திஸாநாயக்க மற்றும் மதுர விதானகே ஆகியோர் கலந்துகொண்டனர்.

# ஆறுமாதத்திற்குள் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கையை பூர்த்திசெய்ய திட்டம்

## மத்திய வங்கி ஆளுநர் அறிவிப்பு

இலங்கை தனது கடன்மறுசீரமைப்பு நடவடிக்கைகளை ஆறுமாதத்திற்குள் பூர்த்தி செய்ய திட்டமிட்டுள்ளதாக மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளிடமிருந்து விரைவில் உத்தரவாதம் கிடைக்குமென அவர் எக்கனமிக் அவுட்லுக் 2023 என்ற நிகழ்வில் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது,

இலங்கை தனது அனைத்து கடன் மீள்கொடுப்பனவையும் நிறைவேற்ற அர்ப்பணிப்புடன் உள்ளது. அடுத்த ஆறுமாதங்களுக்குள் கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளை பூர்த்திசெய்ய திட்டமிட்டுள்ளது.

இந்த மாதம் சிறந்த முன்னேற்றங்கள் காணப்படுகின்றன. இந்தியா ஏற்கனவே நிதி உத்தரவாதத்தை வழங்கியுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கிடைத்தால் நாங்கள் பின்னர் வர்த்தக மற்றும் இரு தரப்பு கடன்வழங்குநர்களுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்போம். இந்த நடவடிக்கையை ஆறுமாதங்களுக்குள் பூர்த்திசெய்ய திட்டமிட்டுள்ளோம். கடன் மறுசீரமைப்புக்கான காலஅட்டவணையே முக்கிய பிரச்சினையாக உள்ளது. கடன்பேண்தகு தன்மை உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே இலங்கை பேண்தகு வளர்ச்சியை நோக்கி பயணிக்க முடியும்.

பரிஸ் கழக நாடுகள் மற்றும் ஏனைய நாடுகளுடனான பேச்சுவார்த்தைகளில் சிறந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஆலம்குளம் பிரதேசத்தில் கஞ்சாவுடன் ஒருவர் கைது

*(கோணாவத்தை நிருபர்)*

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆலம்குளம் பிரதேசத்தில் கஞ்சாவுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்

அக்கரைப்பற்று பொலிஸாருக்குக் கிடைக்கப்பட்ட இரகசிய தகவலின்படி குறித்த பிரதேசத்திற்கு சென்ற பொலிஸார் சந்தேக நபரை கைதுசெய்துள்ளதுடன், அவரிடமிருந்து 850 மில்லிகிராம் கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா முன்னிலையில் நேற்று முன்தினம் (23) ஆஜர்படுத்தியபோது எதிர் வரும் 3ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்

மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




# கைதான தொழிற்சங்கவாதிகளுக்கு 26ஆம் திகதிவரை விளக்கமறியல்

ஐக்கிய ஒன்றிணைந்த தொழிற்சங்க கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளர் ஆனந்த பாலித்த மற்றும் மின்சார பாவனையாளர்கள் சங்கத்தின் செயலாளர் தம்மிக்க சஞ்ஜீவ ஆகியோர் எதிர்வரும் 26ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் நேற்று கோட்டை நீதவான் திலிக கமகே முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து, இந்த விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஆனந்த பாலித்த மற்றும் தம்மிக்க சஞ்ஜீவ ஆகிய இருவரும் நேற்றுமுன்தினம் கொள்ளுப்பிட்டியில் கைதுசெய்யப்பட்டனர்.

இலங்கை பொதுப் பயன்பாடுகள்



ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் இருவருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட சம்பவம் தொடர்பிலேயே இவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் குறிப்பிட்டார்.

குறித்த தொலைபேசி உரையாடல்கள் தொடர்பான அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு நீதவான் நேற்று உத்தரவு பிறப்பித்தார்.

# மூன்றாவது முறையாக புத்தாக்கப் போட்டியில் வென்ற வேம்படி மாணவி



வருடாவருடம் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினரால் (Sri Lanka Inventors Commission) நடத்தப்படும் பாடசாலை மாணவருக்கான சஹசக் நிமவும் (Sahasak Nimavum ) எனும் பெயரில் நடத்தப்படும் தேசிய புத்தாக்கப் போட்டியின் 2022ஆம் ஆண்டுக்கான முடிவுகள் நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டன.

இதன்படி வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை மாணவி ரூபிகா அருந்தவம் வெள்ளிப் பதக்கத்தைப் பெற்று பெருமை சேர்த்துள்ளார்.

இதே மாணவி 2021ஆம் ஆண்டில் குறித்த போட்டியில் வெள்ளிப் பதக்கத்தையும், 2020ஆம் ஆண்டில் வெண்கலப் பதக்கத்தையும் பெற்ற ஒரு வளர்ந்துவரும் புத்தாக்குனருமாவார்.

குறித்த மாணவி இந்தோனேசியன் இளம் விஞ்ஞானிகள் கழகமும், மலேசியன் செகி யூனிவேசிற்றியும் இணைந்து (Indonesian Young Scientist Association collaborated with SEGi University Malaysia ) சர்வதேச ரீதியில் பிரயோக விஞ்ஞானத்துறையில் இணையவழியில் நடத்தப்பட்ட புத்தாக்கப் போட்டி மற்றும் கண்காட்சியிலும் கலந்துகொண்டு வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றதொரு மாணவியுமாவார்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் உரிமைக் காவலன்

இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2023, ஜனவரி 25ஆம் திகதி, புதன்கிழமை

# கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய அமைச்சர் ஜெய்சங்கரின் கருத்து!

இலங்கை முன்னேற வேண்டுமெனில் பொருளாதார வளர்ச்சி அவசியமானது. அதற்கு, இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டு, தமிழ் மக்களும் சம உரிமை பெறுவது அவசியம். தற்போதைய சூழலில் 13ஆவது திருத்தமே சாத்தியமானது. ஏனைய விடயங்களை அடுத்தகட்டமாக பார்த்துக் கொள்ளலாம் என இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், கொழும்பில் கடந்த 20ஆம் திகதி தமிழ்க்கட்சிகளின் தலைவர்களை சந்தித்துப் பேசியபோது தெரிவித்திருந்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் செல்வம் அடைக்கலநாதன், த.சித்தார்த்தன், சுரேஷ் பிரேமச்சந்திரன், என்.சிறிகாந்தா, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் இரா.சம்பந்தன், மாவை சேனாதிராஜா, எம்.ஏ.சுமந்திரன், தமிழ் காங்கிரஸின் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோரை ஒன்றாக சந்தித்தார் ஜெய்சங்கர்.

இலங்கை மிக மோசமான நெருக்கடியான கட்டத்தில் உள்ளது. இதிலிருந்து துரிதமாக மீண்டெழவில்லையென்றால், மிகப்பெரிய நெருக்கடியை மக்கள் சந்திப்பார்கள். இந்த பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு, இலங்கை முன்னேற வேண்டுமெனில் பொருளாதார வளர்ச்சி மட்டும்தான் ஒரே தீர்வு. அதற்கு, இலங்கை உள்ளக இனப்பிரச்சினையை தீர்த்துக் கொள்ள வேண்டும். தற்போது சிங்கள மக்களும் இனப்பிரச்சினை தீர்விற்கான சாதகமான அபிப்பிராயத்திற்கு வருகிறார்கள். இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்த்து, இனநல்லிணக்கத்தை ஏற்படுத்தினால் மாத்திரமே அடுத்த கட்டத்திற்கு முன்னேற முடியும். இந்தியாவின் நிலைப்பாடு எப்பொழுதும் ஒன்றுதான். 13ஆவது திருத்தம் இப்பொழுது மேசையில் உள்ளது. அதை நீங்கள் நடைமுறைப்படுத்துவது இலகுவானது. 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதுதான் இந்தியாவின் ஒரே நிலைப்பாடு என்று இந்தியாவின் கருத்தை திட்டவட்டமாக வலியுறுத்தியுள்ளார் இந்திய வெளியுறவு அமைச்சர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உட்பட்ட அரசியல் தலைவர்களை கொழும்பில் சந்தித்தபோது இதே கருத்தை அமைச்சர் ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார் என்று தெரிகிறது.

இந்தியாவைப் பொறுத்தவரை இலங்கை இப்போதுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள உதவுவதை விரும்புகிறது. அதனால்தான் இலங்கை வழங்கவேண்டிய கடன்களை மறுசீரமைத்து, சர்வதேச நாணய நிதியத்திற்கு கடிதமொன்றை அனுப்பியது. கடன் மறுசீரமைப்புக்கு உத்தரவாதத்தைத் தாருங்கள் என்று இலங்கையானது சீனாவிடமும், இந்தியாவிடமும் கோரிக்கை விடுத்து காத்திருந்தபோது ஆபத்பாந்தவன் போல் முதலில் உதவியது பாரதமே. இந்தியா அறிவித்த பிறகே சீனா இது தொடர்பான தனது நிலைப்பாட்டை அறிவித்தது. எது எப்படியிருந்தாலும் இலங்கையைப் பொறுத்தவரை இந்தியாவின் ஒத்துழைப்பே மிக முக்கியமான விடயமாக நோக்கப்பட்டது. அதை சரியான நேரத்திற்கு செய்தது புதுடில்லி. கொரோனாவுக்குப் பின்னரான பொருளாதார நெருக்கடியான காலகட்டங்களில் சரியான நேரத்திற்கு இந்தியா உதவியதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

இப்படியான உதவிகளை செய்தும், இலங்கையின் பொருளாதார நெருக்கடி தீர வேண்டுமாயின் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் அமுலாக்கப்படவேண்டுமென இந்தியா சொல்வதற்கு தர்க்க ரீதியான பல காரணங்கள் உள்ளன. மூன்று தசாப்த உள்நாட்டுப் போருக்குப் பின்னர், போர் முடிந்த 2009ஆம் ஆண்டுமுதல் இதுவரை தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவில்லை. தமிழருக்குக் கிடைத்த குறைந்தபட்சத் தீர்வான மாகாண சபை முறைமையே முடங்கிப்போயிருக்கிறது. இந்தியாவால் முன்மொழியப்பட்ட அந்த முறைமையை அமுலாக்கி தமிழர் பிரச்சினைக்கு கொழும்பு தீர்வு காணுமாயின் இந்தியா இன்னும் மேலான உதவிகளை செய்யும். உலக நாடுகளை செய்யவைக்கும். அப்படியில்லாமல் தமிழருக்கு குறைந்தபட்ச தீர்வைக்கூட கொடுக்காமல், இன்னும் இழுத்தடிப்புச் செய்தால் இப்படியே இருக்கவேண்டியதுதான் என்ற கனதியான செய்தியையே ஜெய்சங்கர் கொழும்புக்கு கூறியிருக்கிறார்.

நாளை கொழும்பில் சர்வகட்சித் தலைவர்கள் கூட்டத்தை கூட்டியிருக்கிறார் ஜனாதிபதி ரணில். ஆனால், அதற்கு முன்னரே 13ஆவது திருத்த அமுலாக்கலுக்கு எதிராக போர்க்கொடி தூக்கியிருக்கின்றனர் சிங்கள இனவாதிகள். ஆனால், பொருளாதார நெருக்கடியால் உழன்று நிற்கும் இலங்கை மக்கள், குறிப்பாக பெரும்பான்மை சகோதரர்கள் இந்த இனவாத பேச்சுகளால் எடுபடாதவர்களாக, தற்போதைய நாட்டின் நிலைவரத்தை விளக்கி, வழமைபோல எதிர்ப்பை வெளியிடும் பௌத்த பீடங்களுக்கு உண்மை நிலையை எடுத்துக்கூறி இந்தியாவின் அந்த கரிசனையை கவனத்திற்கொள்ள இலங்கை அரசாங்கம் தயாராக வேண்டும்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் இலங்கை அரசியலில் நன்கு பரிச்சயம் கொண்டவர். கொழும்பிலுள்ள இந்திய தூதரகத்தில் அவர் பணியாற்றியவர். இலங்கையின் வரலாறும் தமிழர் பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் சறுக்கிய இடங்கள் என்பன தொடர்பிலும் அவருக்கு ஞானம், பட்டறிவு உள்ளது. கடைநிலை பணியாளராக இருந்து இன்று பாரதத்தின் வெளிநாட்டமைச்சராக பதவி வகிக்கும் அவரின் அந்தக் கருத்து மிகுந்த அர்த்தம்பொதிந்தது. அதனை உணர்ந்து சரியான நேரத்தில் சரியான தீர்மானத்தை எடுக்க வேண்டும் இலங்கை அரசு. தமிழர் எதிர்பார்ப்பும் இதுவே.

# கம்பனிகள் மற்றும் சங்கங்கள் கட்டணங்களைத் திருத்துவது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலுக்கு கைத்தொழில் அமைச்சுசார் குழுவில் அனுமதி







கம்பனிகள் மற்றும் சங்கங்கள் கட்டணங்களைத் திருத்துவது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலுக்கு கைத்தொழில் அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் அனுமதி வழங்கப்பட்டது.

பெருந்தோட்ட மற்றும் கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரண தலைமையில் கைத்தொழில் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டம் அண்மையில் (20) பாராளுமன்றத்தில் நடைபெற்றபோதே இதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

இதற்கமைய 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 477ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 527ஆம் பிரிவின் கீழ் மற்றும் 2005ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க சங்கங்கள் கட்டளைச் சட்டத்துடன் (திருத்தியமைக்கப்பட்ட) வாசிக்கப்பட வேண்டிய 1891ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் (123ஆம் அத்தியாயம்) 19ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட கட்டளைகளுக்கு அமைச்சுசார் ஆலோசனைக் குழு அனுமதி வழங்கியது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் 2022 ஒக்டோபர் 25ஆம் திகதி வெளியிடப்பட்டதுடன், இதன் ஊடாக 2016, ஒக்டோபர் மாதம் 25ஆம் திகதிய 1990/12ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பிரசுரிக்கப்பட்ட கம்பனிகள் மற்றும் சங்கங்களுக்கான கட்டணங்கள் திருத்தியமைக்கப்படவுள்ளன.

இது தவிர, மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் பல்வேறு தொழில்களை ஊக்குவிப்பது குறித்தும், புதிய தொழில் முனைவோரை ஊக்குவிப்பதற்குத் தேவையான கடனுதவி வழங்குவது குறித்தும் கடன்கள் திறம்பட பயன்படுத்தப் படுகிறதா என்பதைக் கண்காணிப்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

இந்தக் குழுவில் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த, பாராளுமன்ற உறுப்பினர்களான கயாஷான் நவனந்த மற்றும் ஜகத் குமார சுமித்திராராச்சி ஆகியோர் கலந்துகொண்டனர்

# மக்களுக்கு உயர்தர - சுத்தமான குடிநீரை வழங்குவதை நோக்கமாகவும் இலக்காகவும் கொண்டு சேவையாற்ற உள்ளேன் - அமைச்சர் ஜீவன்





(ஆ.ரமேஸ்)

பொதுமக்களுக்கு உயர்தர, சுத்தமான குடிநீரை வழங்குவதை நோக்கமாகவும் இலக்காகவும் கொண்டு சேவையாற்றவுள்ளேன் என தோட்ட உட்கட்டமைப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ஜீவன் தொண்டமான் அமைச்சின் அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளார்.

பொதுமக்களின் எதிர்பார்ப்பை இலக்காகக் கொண்டு முன்னெடுக்கப்படும் சேவையினூடாக அந்த இலக்கை அடைய அமைச்சுக்களின் கீழுள்ள அனைத்து நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகளின் பூரணமாக ஒத்துழைப்பையும் ஆதரவையும் எதிர்பார்க்கிறேன் எனவும் தெரிவித்துள்ள அமைச்சர் இலக்கை அடைய அனைவரும் ஒன்று சேர்ந்து செயற்படவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சராகப் பதவியேற்ற அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் நீர்வழங்கல் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் (23) இடம்பெற்ற முதல் விசேட கலந்துரையாடலில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலின்போது நீர்வழங்கல் அமைச்சின் ஊடாக 2022ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் உட்பட 2023ஆம் ஆண்டு முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக அமைச்சின் அதிகாரிகளினால் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

அதேபோன்று தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சினூடாக முன்னெடுக்கப்படும் திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இதன்போது அங்கு அதிகாரிகளுடன் உரையாடிய அமைச்சர் பொதுமக்களுக்கு உயர்தர சுத்தமான குடிநீரை வழங்குவதே நமது நோக்கமாகும். அதற்காக அமைச்சுக்களின் கீழுள்ள அனைத்து நிறுவனங்களினதும் அதிகாரிகளினதும் பூரண ஆதரவை எதிர்பார்ப்பதாகவும் இந்த இலக்கை அடைய அனைவரும் ஒன்று சேர்ந்து செயற்படவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

இக்கலந்துரையாடலில் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான், நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த, இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமான், அமைச்சின் செயலாளர்கள், பணிப்பாளர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# ரொனால்ட் சி.பெரேரா இலங்கை வங்கியின் தலைவராகக் கடமைகளைப் பொறுப்பேற்பு



இலங்கை வங்கியின் தலைவராக ஜனாதிபதி சட்டத்தரணி ரொனால்ட் சி.பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார் 2023ஆம் ஆண்டு ஜனவரி 20ஆம் திகதி இலங்கை வங்கியின் தலைமையகத்தின் தலைவர் அலுவலகத்தில் தனது கடமைகளைப் பொறுப்பேற்ற அவரை வங்கியின் பொது முகாமையாளர் ரசல் பொன்சேகா, நிறுவன முகாமைத்துவ உறுப்பினர்கள், வங்கி ஊழியர்கள், நலன் விரும்பிகள் எனப் பலரும் வரவேற்றனர்.

கொழும்பு சென். ஜோசப் கல்லூரியில் பயின்ற பெரேரா கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்ட இளமாணிப் பட்டத்தையும் நார்த்தம் ப்ரியா பல்கலைக்கழகத்தில் சர்வதேச வர்த்தக சட்டத்தில் சட்ட முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுள்ளார். 2012இல் ஜனாதிபதி சட்டத்தரணியாக நியமிக்கப்பட்ட இவர் இதற்கு முன்னரும் இலங்கை வங்கியின் தலைவர் மற்றும் பணிப்பாளர் பதவிகளை வகித்துள்ளார்.

உயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் என்பவற்றில் வழக்குரைஞராகச் செயற்பட்ட பரந்த அனுபவத்தைக் கொண்ட இவர் பொது, குற்றவியல் வழக்குகள், பேச்சுவார்த்தைகள், வணிக மற்றும் போக்குவரத்து ஒப்பந்தங்களை வரைதல் ஆகியவற்றில் சிறந்த அனுபவம் உடையவராவார்.

வணிகச் சட்டம், வங்கிச் சட்டம், தொழில்துறைச் சட்டம், தடைக் கட்டளைகள், அவதூறுகள், தேர்தல் மனுக்கள், சிவில் மேல்முறையீடுகள், மீளாய்வு விண்ணப்பங்கள், ஆணை விண்ணப்பங்கள் மற்றும் அடிப்படை உரிமை வழக்குகள் ஆகியவற்றில் மிகுந்த அறிவும் அனுபவமும் கொண்டவர். மேலும், இவர் பல வணிக நடுவர் மன்றங்களில் முன்னிலையாகியுள்ளார்.

தற்போது இலங்கைக் காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் தலைவராகவும் தேசிய லொத்தர் சபையின் பதில் தலைவராகவும் செயற்பட்டுவரும் இவர் இலங்கை வங்கியின் துணை நிறுவனங்களான வரையறுக்கப்பட்ட இலங்கை வங்கி (ஐக்கிய இராச்சிய) நிறுவனம், இலங்கை வர்த்தக வங்கி மற்றும் பினான்ஸ் பி.எல்.சி என்பவற்றின் முன்னாள் தலைவராகவும் ஹொட்டேல்ஸ் கொழும்பு நிறுவனத்தின் பதில் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

வங்கியின் முன்னாள் இணை நிறுவனங்களான வரையறுக்கப்பட்ட மிரேக்கா கெப்பிட்டல் லாண்ட் (தனியார்) நிறுவனம், வரையறுக்கப்பட்ட மிரேக்கா ஹோம்ஸ் (தனியார்) நிறுவனம் என்பவற்றின் பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

# இன்றைய நாளில்..

- 1881 – தோமஸ் அல்வா எடிசன், அலெக்சாண்டர் கிரஹம்பெல் ஆகியோர் இணைந்து ஓரியண்டல் டெலிபோன் கம்பெனி என்ற நிறுவனத்தை ஆரம்பித்தனர்.
- 1882 – வேல்ஸ் இளவரசர்கள் அல்பேர்ட் விக்டர், ஜோர்ஜ் ஆகியோர் அரசு முறைப் பயணமாக கொழும்பு வந்தனர்.
- 1890 – நெல்லி பிளை தனது 72 நாட்கள் உலகம் சுற்றும் பயணத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டார்.
- 1947 – தோமஸ் கோல்ட்ஸ்மித் என்பவர் முதலாவது இலத்திரனியல் விளையாட்டுக் கருவி, “எதிர்மின் கதிர்க் குழாய் கேளிக்கைக் கருவியை” கண்டுபிடித்தார்.
- 1949 – முதலாவது எம்மி விருது வழங்கப்பட்டது.
- 1971 – இந்தியாவின் 18ஆவது மாநிலமாக இமாசல பிரதேசம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- 1980 – அன்னை தெரேசாவிற்கு இந்தியாவின் பாரதரத்னா என்ற அதியுயர் விருது வழங்கப்பட்டது.
- 1981 – மாசே துங்கின் மனைவி சியாங் சிங்கிற்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. இது பின்னர் ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது.
- 1993 – கொட்டியாரக் குடாக் கடலில் மூதூர்-திருகோணமலை நகரங்களுக்கிடையிலான சேவையில் ஈடுபட்டு வந்த பயணிகள் படகு ஒன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் நூற்றுக்கும் அதிகமானோர் மூழ்கி இறந்தனர்.
- 1994 – நாசாவின் கிளமெண்டைன் விண்கலம் சந்திரனை நோக்கி ஏவப்பட்டது.
- 1998 – கண்டியின் தலதா மாளிகையில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் 8 பேர் கொல்லப்பட்டு 25 பேர் படுகாயமடைந்தனர்.
- 2002 – விக்கிப்பீடியா, மீடியாவிக்கி மென்பொருளுக்கு மாறியது.
- 2004 – ஒப்பர்சூனிட்டி தளவுளவி செவ்வாயில் தரையிறங்கியது.
- 2006 – சூரியக் குடும்பத்திற்கு வெளியே பால்வழியின் நடுவிற்குக் கிட்டவாக பூமியில் இருந்து 21,5003,300 ஒளியாண்டுகள் தூரத்தில் OGLE-2005-BLG-390Lb என்ற கோள் கண்டுபிடிக்கப் பட்டது.



# டக்ளஸ் தேவானந்தா மீது கொலை முயற்சி: உடந்தையாக இருந்தவருக்கு மரணதண்டனை!

## மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பு


கடந்த 2004ஆம் ஆண்டு கொள்ளுப்பிட்டி பகுதியில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அலுவலகத்தின் மீது குண்டுத் தாக்குதல் நடத்தி நால்வரை கொலை செய்வதற்கு ஜெயராணி என்ற குண்டுதாரிக்கு உடந்தையாக செயற்பட்டமை தொடர்பில் செல்வகுமாரி சத்தியலீலா என்பவருக்கு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் மரணதண்டனை விதித்துள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை படுகொலை செய்யும் நோக்கில் 2004ஆம் ஆண்டு ஜூலை மாதம் 07ஆம் திகதி, பம்பலப்பிட்டி பகுதியிலிருந்த அவரது அலுவலகத்திற்குள் தற்கொலை குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த குண்டுத் தாக்குதலில் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட நால்வர் உயிரிழந்திருந்தனர்.

இந்த குற்றச்சாட்டு தொடர்பில் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்ட செல்வகுமாரி சத்தியலீலாவுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் 15 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 வருட சிறைத்தண்டனையை ஏற்கனவே விதித்திருந்தது.

இந்த நிலையிலேயே, கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் அவருக்கு மரணதண்டனை விதித்து தீர்ப்பு வழங்கியுள்ளது.

# ரூ. 60 இலட்சம் பெறுமதியான நகைகளுடன் ஒருவர் கைது



(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை கந்தளாய் சூரியபுர பொலிஸ் சோதனைச்சாவடியில் வைத்து அறுபது இலட்சம் ரூபா பெறுமதியான நகைகளை கடத்திச்சென்ற ஒருவரை கைது செய்துள்ளதாக சூரியபுர பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர் தோப்பூர் பிரதேசத்திலிருந்து அறுபது இலட்சம் ரூபா பெறுமதியான நகைகள் மற்றும் முப்பத்தையாயிரம் ரூபா பணத்தினையும் முச்சக்கரவண்டியொன்றில் கடத்திச் சென்றபோதே சூரியபுர பொலிஸ் சோதனைச் சாவடியில் வைத்து கைப்பற்றியதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய முச்சக்கரவண்டியுடன் சந்தேக நபரை கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபரிடமிருந்து பெறுமதியான இரண்டு கையடக்கத் தொலைபேசிகளையும் கைப்பற்றியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபருக்கெதிராக மூதூர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் உள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணை மூதூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# லொறியிலிருந்து விழுந்து 11 மாணவர்கள் காயம்



ஹுனுமுல்ல மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு லொறி ஒன்றில் வீடுதிரும்பிக் கொண்டிருந்த 11 பாடசாலை மாணவர்கள் கெலபிட்டிமுல்ல பிரதேசத்தில் லொறியில் இருந்து தவறி விழுந்து காயமடைந்துள்ளனர்.

இவ்வாறு காயமடைந்த 7 மாணவர்கள் திவுலப்பிட்டி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பாடசாலை முடிந்து வீடு செல்வதற்காக லொறியில் ஏறிய மாணவர்கள் லொறி வளைவில் திரும்பிய வேளை தவறி விழுந்ததாக சக மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

# இலங்கையின் மிகப்பெரிய உரத் தொழிற்சாலை திறப்பு



இலங்கையின் மிகப் பெரிய மற்றும் தொழில்நுட்ப ரீதியாக மேம்பட்ட உர உற்பத்தித் தொழிற்சாலையான இலங்கை உயிரி உரக் கம்பனியின் ஹொரண, மில்லேவயில் உள்ள தொழிற்சாலை வளாகம் விவசாய அமைச்சர் மகிந்த அமரவீரவால் திறந்துவைக்கப்பட்டது.

40,000 சதுர அடி பரப்பளவில் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய இந்தத் தொழிற்சாலையில் இலங்கைக்கான உயிரி உரங்கள் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டது.

ஆண்டுக்கு ஒரு மில்லியன் லீற்றர் உயிரி உரங்களை உற்பத்தி செய்யும் திறன் கொண்டது என்றும், அடிப்படை கல்வி நிறுவனங்களுடன் இணைந்து, இந்த தொழிற்சாலையானது 100 வீதம் இயற்கையான, சுற்றுச்சூழலுக்கு உகந்த உயிரி உரங்களான பயோ பிலிம் உயிரி இரசாயன உரங்களை உற்பத்தி செய்கிறது என்றும் விவசாய அமைச்சு கூறுகிறது.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## 24.01.2023 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 141 238 | 152 3556 |
| கனேடியன் டொலர் | 157 0002 | 168 8672 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 41 1100 | 44 3018 |
| யூரோ | 278,8381 | 3 4 53 5 |
| ஜப்பான் யென் | 1 6374 | 1 7500 |
| சிங்கப்பூர் டொலர் | 160 47 3 | 172 3 53 |
| ஸ்ரேலிங் பவுன் | 333 4544 | 350 3375 |
| சுவிஸ் பிரான்ங் | 276 6 7 | 3 5 2577 |
| ஐ.அ.டொலர் | 25 3801 | 260 28 8 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 85 4618 |
| குவைட் | குவைட் தினார் | 0,074 6270 |
| ஓமான் | ஓமான் றியால் | 83 5154 |
| கட்டார் | கட்டார் றியால் | 88, 344 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 3427 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 4868 |

# ஜப்பான் நிதியுதவியின் கீழ் ஐ.நா. அமைப்பு வழங்கிய குளிரூட்டல் அறைகள் சுகாதார அமைச்சிடம் கையளிப்பு





சிறுவர்களின் தொடர்ச்சியான சுகாதார மேம்பாட்டை இலக்காகக்கொண்டு ஜப்பான் அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட walk-in cold rooms எனும் குளிரூட்டப்பட்ட அறைகள் மற்றும் போசாக்கு வழங்கல்கள் சுகாதார அமைச்சுக்கு நேற்று (ஜன 24) கையளிக்கப்பட்டன.

நேற்று செவ்வாய்க்கிழமை இவ்வாறு கையளிக்கப்பட்ட உபகரணத் தொகுதிகளில் 13 குளிரூட்டப்பட்ட அறைகள், அதாவது அதிவெப்பநிலை உணர்திறனுடைய தடுப்பூசிகளை பாதுகாப்பாக அதிகளவில் வைத்திருக்க முடியுமான பெரிய குளிர்சாதனப் பெட்டிகள் இருக்கின்றன. இவை கொழும்பு மாவட்டத்திலும், பிராந்திய மருத்துவ வழங்கல் கிளைகளான கம்பஹா, களுத்துறை, காலி, கண்டி, கேகாலை, அநுராதபுரம், இரத்தினபுரி மற்றும் பதுளை மாவட்டங்களிலும் பொருத்தப்பட்டுள்ளன.

2021ஆம் ஆண்டில் சுகாதார அமைச்சிற்கு ஏற்கனவே 3 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான எடுத்துச் செல்லத்தக்க தடுப்பூசிக் கொள்கலன்கள் மற்றும் வெப்பநிலைக் கண்காணிப்பு மானிகள் உள்ளடங்கலாக பல்வேறு குளிர்ச் சங்கிலி உபகரணத் தொகுதிகள் வழங்கப்பட்டன. அவற்றின் ஒரு பகுதியே அண்மையில் வழங்கி வைக்கப்பட்டுள்ள இவ் உபகரணங்களாகும். இவை நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிப்பது மாத்திரமன்றி தடுப்பூசிகளை பாதுகாப்பாகவும் சிறப்பாகவும் களஞ்சியப் படுத்துவதற்கும் தேவைப்படும் எல்லா இடங்களிலும் கிடைப்பதற்கும் வழிசெய்யும்.

அத்துடன், இவற்றுக்கு மேலதிகமாக சிறுவர்களின் பராமரிப்புக்கு உடனடியாகத் தேவைப்பட்ட நுண்ணூட்டச் சத்துக்களைத் கொள்வனவு செய்வதற்கும், ஊட்டச்சத்துக் குறைபாடு மற்றும் ஏனைய நோய்களைக் கண்டறிவதற்கு பரிசோதனைகளை நடாத்தி தேவையான ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களை வழங்குவதற்குமென 500,000 அமெரிக்க டொலர் நிதிப்பங்களிப்பு வழங்கப்பட்டதோடு அதன் ஒரு பகுதியே இப்போசாக்கு வழங்கல்களாகும்.

# சட்டத்தரணிகள் மீதான 'பி' அறிக்கையை மீளப்பெற்ற வாழைத்தோட்டப் பொலிஸார்

கடந்த 18ஆம் திகதி கொழும்பு புதுக்கடை நீதவான் நீதிமன்றத்திற்கு முன்பாக எதிர்ப்பில் ஈடுபட்ட சட்டத்தரணிகள் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த 'பி' அறிக்கை வாழைத்தோட்டப் பொலிஸாரால் நேற்று (24) மீளப்பெறப்பட்டுள்ளது.

கொழும்பு மேலதிக நீதவான் தரங்கா மஹவத்த மீது சட்ட மா அதிபர் திணைக்களம் தேவையற்ற அழுத்தங்களைப் பிரயோகித்ததாகக் கூறி சட்டத்தரணிகள் குழுவொன்று நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது.

இதில் கலந்துகொண்ட 03 சட்டத்தரணிகளுக்கு எதிராக கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் 'பி' அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த அறிக்கையை பரிசீலித்த பிரதம நீதவான் பிரசன்ன அல்விஸ், விசாரணைகளை நடத்தி நீதிமன்றத்தில் விடயங்களை அறிக்கையிடுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தார்.

எவ்வாறாயினும், குறித்த முறைப்பாடு நேற்று (24) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, மேலதிக நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளாமல் அறிக்கையை மீளப் பெறுவதற்கு அனுமதி கோருவதாக வாழைத்தோட்டப் பொலிஸார் மன்றுக்குத் தெரிவித்தனர்.

அதற்கு அனுமதியளித்த கொழும்பு பிரதம நீதவான் பிரசன்ன அல்விஸினால் இந்த வழக்கு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

# யாழ். போதனா வைத்தியசாலையில் கறுப்புப் பட்டியுடன் வைத்தியர்கள்







யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையின் வைத்தியர் கள் பல்வேறு கோரிக்கை களை முன்வைத்து அரசாங்கத்திற்கு எதிர்ப்பைத் தெரிவிக்கும் முகமாக நேற்று கறுப்புப் பட்டி அணிந்து கடமை யாற்றினர்.

அரச வைத்திய அதிகாரி களின் சங்கத்தினரால் முன்னெடுக்கப்படுகின்ற கறுப்பு வாரத்தின் முதல் நாளான நேற்று இந்த எதிர்ப்பு முன்னெடுக்கப்பட்டது.

அரச வைத்தியசாலையில் நிகழும் மருந்துத் தட்டுப்பாடு, சத்திர சிகிச்சை உபகரணங்களுக்கான தட்டுப்பாடு என்றவற்றை நிவர்த்திசெய்து வளங்களை சீரான முறையில் வழங்குமாறு கோரியும், முறையற்ற விதத்தில் தன்னிச்சையாக வரி என்ற போர்வையில் அரசால் பறிமுதல் செய்யப்படும் சம்பளப் பணத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவும் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

தொடர்ந்து எதிர்வரும் வியாழக்கிழமை வடமாகாணம் முழுவதையும் ஒருங்கிணைத்து அரசாங்கத்தால் நிர்வகிக்கத் தவறிய மருந்துப் பொருட்களுக்கான முறையற்ற வழங்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக வைத்தியசாலைக்கு வருகை தரும் பொதுமக்களிடம் கையெழுத்துப் பெறும் போராட்டமும் முன்னெடுக்கப்படவுள்ளது.


# செலான் வங்கி பீ.எல்.சி.

1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேடஏற்பாடுகள்) சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் நடைபெறும் ஏலவிற்பனை

**செலான் வங்கி (பீ.எல்.சி.) - புஸ்ஸெல்லாவ கிளை**
**பெறுமதிமிக்க இடம் ஒன்றின் பிரசித்த ஏலவிற்பனை**

நுவரெலியாவில் தனது சொந்த பதிவுக் காரியாலயத்தைக் கொண்டுள்ள மற்றும் சொந்த பதிவு இலக்கம் PV 95612இன் 2007 இலக்கம் 07ஐ உடைய கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட கம்பனி ஒன்றான நுவரெலியா லேண்ட்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டட் கடப்பாடு /ஈடுவைத்ததுடையதாகவும், செலான் வங்கியின் சார்பாக பிரசித்த நொத்தாரிசு ஏ.எம்.டி.லிமாவினால்அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2018.04.26 ஆம் திகதியிடப்பட்ட 1736 மற்றும் 1737 ஆகிய இரு முறிகளின்மீதான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளதாதலால்,

**2023ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21ஆம் திகதி மு.ப. 11.45 மணிக்கு செலான் வங்கி பீ.எல்.சி. மூலம் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்குட்பட்டு செலான் வங்கி பீ.எல்.சி. இல 90, காலி வீதி, கொழும்பு 03 இல் உள்ள வங்கியின் வளாகத்தில் என் மூலமாக பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.**

**அட்டவணை**

மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தில், பாத்ததும்பரவின் உடகம்பஹ கோரளையில் பாத்ததும்பர பிரதேச சபை எல்லைக்குள், பாத்ததும்பர பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 597, ஈரியகஸ்தென்ன கிராம சேவகர் பிரிவிற்குள் நாரந்தன கிராமத்தில் அமைந்துள்ள "ராம சந்திர எஸ்டேட்" என அழைக்கப்படுவதும் தெரியப்படுவதுமான காணி, உரிமம் பெற்ற நில அளவையாளர் எச்.டி.பி.குணவர்தனாவினால் 1996.09.24ஆம் திகதி வரையப்பட்ட வரைபட இலக்கம் 593 இல் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு இல.1 என அடையாளமிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட ஒரு ஏக்கர் ஒரு றூட் முப்பத்து ஐந்து தசம் இரண்டு பேர்ச் (ஏ1.றூ1.பே35.2) விஸ்தீரணம் கொண்ட காணி மற்றும் கட்டடங்கள், மரங்கள் மற்றும் பயிர்ச்செய்கைகள் உட்பட அனைத்துடனான எல்லாம்.

மேற்குறிப்பிடப்பட்ட காணித்துண்டின் அண்மைய நிலஅளவை பின்வருமாறு காணப்படுகிறது:

மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தில், பாத்ததும்பரவின் உடகம்பஹ கோரளையில் பாத்ததும்பர பிரதேச சபை எல்லைக்குள், பாத்ததும்பர பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 597, ஈரியகஸ்தென்ன கிராம சேவகர் பிரிவிற்குள் நாரந்தன கிராமத்தில் அமைந்துள்ள "ராம சந்திர எஸ்டேட்" என அழைக்கப்படுவதும் தெரியப்படுவதுமான காணி, (உரிமம் பெற்ற நில அளவையாளர் என்.பி.டி.வேத்தேவயினால் தயாரிக்கப்பட்ட 2017.04.06 திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 5468 இல் காட்டப்பட்டுள்ள காணித்துண்டு இல.1 இன் நிலஅளவை ஒன்று செய்யப்பட்டிருக்கிறது) உரிமம் பெற்ற நில அளவையாளர் என்.பி.டி.வேத்தேவயினால் 2018.04.05ஆம் திகதி வரையப்பட்ட வரைபட இலக்கம் 5496 இல் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு இல. 1இலிருந்து 18 என அடையாளமிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்ட, வரையறுக்கப்பட்ட மற்றும் பகிரப்பட்ட ஒரு ஏக்கர் ஒரு றூட் இருபத்து ஏழு பேர்ச் (ஏ1.றூ1.பே27) விஸ்தீரணம் கொண்ட காணி மற்றும் கட்டடங்கள், மரங்கள் மற்றும் பயிர்ச்செய்கைகள் உட்பட அனைத்துடனான எல்லாம்.

**காணிக்குப் பிரவேசிக்கும் வழி-** கண்டியிலிருந்து வத்தேகம வீதியூடாக மடவள சந்தி வரைசென்று மேலும் 950 மீற்றர் பிட்டியே கெதர சந்தி வரை சென்று வலது பக்கமாக திரும்பி பன்வில வீதியூடாக 2.1 கிலோ மீற்றர் தூரம் செல்லும்போது குறித்த காணித்துண்டு இடது பக்கமாக அமைந்துள்ளது.

**தீர்மான முடிவு அறிவித்தல்கள்:** 2019 ஒக்டோபர் 18ஆம் திகதிய இலங்கைச் ஜனநாயக சோஷலிசக் குடியரசின் வர்த்தமானியிலும் 2019 ஒக்டோபர் 21ஆம் திகதிய டெய்லி மிரர், லங்காதீப மற்றும் தினக்குரல் ஆகிய பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்.-** உத்தேச கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும்.
(1) கொள்வனவு விலையின் 10% (2) உள்ளூராட்சி மன்ற வரி 1%
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5% (4) விற்பனை நிபந்தனை உறுதிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 2000/-
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் 1000/- (6) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்

மிகுதி 90% வீதத்தையும், இலங்கை அரசாங்கத்தினாலோ அல்லது வேறு அதிகார சபையினாலோ விதிக்கப்படும் சட்டரீதியான வரி அல்லது "கட்டணங்கள் ஏதுமிருப்பின் அவற்றோடு. ஏலத்திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீ.எல்.சி. தாபனத்திற்கு செலுத்துதல்வேண்டும். மேற்குறிப்பிடப்பட்டவாறு மிகுதிப் பணம் குறிப்பிட்ட திகதிக்கு முன்னால் செலுத்தப்படாதவிடத்து, செலுத்திய பணத்தை திருப்பித் தராமலிருப்பதற்கும் அதே காணியை மறு ஏலவிற்பனை செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரித்துறுதி. ஏனைய ஆவணங்கள் மற்றும் விபரங்களைப் பெற்றுக்கொள்ள கீழ்க்குறிப்பிடப் பட்டுள்ள அதிகாரிகளிடம் விசாரணைகளை மேற்கொள்ளவும்.
பிரதான முகாமையாளர் (சட்டம்), செலான் வங்கி பீ.எல்.சி. இலக்கம் 90, காலிவீதி,கொழும்பு 03.
தொலைபேசி இலக்கங்கள்: 011-2456485, 011-2456457, 011-2456473

**சந்திமா பிரியதர்ஷனீ கமகே, நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பீட்டாளர் மற்றும் உரிமம் பெற்ற ஏலதாரர்.**
**இல. 9-I. ஹைலெவல் வீதி, சர்வோதய மாவத்த, பனாகொட, ஹோமாகம.**
**தொலைபேசி இலக்கம்: 071 4318252, 011- 2173282**



ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
திங்கட்கிழமை 2023.01.23
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

| சீட்டு | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து / இலக்கினம் | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|---|---|
| மஹஜன சம்பத | 5009 | ரூ. 15,941,755.00 | Y | 7 0 7 6 1 6 |
| கொவிசெத | 3251 | ரூ. 73,188,274.80 | S | 12 17 44 48 |
| ஜாதிக சம்பத | 1464 | ரூ. 13,624,701.60 | கடகம் | 1 9 9 4 4 1 |
| தன நிதானய | 1039 | ரூ. 80,000,000.00 | E | 30 31 53 69 |
| ராசி சுப பலன் Handahana | 318 | ரூ. 2,558,751.80 | கும்பம் (விசேட இலக்கினம்: கும்பம்) | 04 36 47 53 |
| மெகா பவர் | 1357 | ரூ. 294,712,250.00 (அடுத்த மெகா சுப்பர் பரிசு) | I (சுப்பர் இலக்கம் 03) | 19 49 60 79 |

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# ரதெல்ல கோர விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்க அமைச்சரவை அனுமதி

## அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு



நுவரெலியா, நானுஓயா – ரதெல்ல பகுதியில் இடம்பெற்ற கோர விபத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

நுவரெலியா நானுஓயா பகுதியில் கடந்த 20ஆம் திகதி இடம்பெற்ற வாகன விபத்தில் 7 பேர் உயிரிழந்துள்ளதுடன், 51 பேர் காயமடைந்திருந்தனர்.

இந்தநிலையில், உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சர் ஜீவன் தொண்டமான் குறிப்பிட்டுள்ளார்.

# நானுஓயா குறுக்கு வீதியில் கனரக வாகனங்கள் பயணிப்பதற்கான தடை தொடர்ந்தும் நீடிப்பு

## நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபொட தெரிவிப்பு

(செ.திவாகரன்)



நானுஓயா குறுக்கு வீதியில் கனரக வாகனங்கள் பயணிப்பதற்கு விதிக்கப்பட்ட தடைதொடர்ந்துநடைமுறையில் இருக்கும் என நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபொட தெரிவித்தார்.

ரதெல்லகுறுக்குவீதியை கனரகவாகனங்கள் பயன்படுத்த விதிக்கப்பட்ட தடை குறித்து ஆராய்ந்து அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பில் நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபொட தலைமையில், நுவரெலியா மாவட்ட செயலகத்தில் விசேட கூட்டமொன்று நேற்றுமுன்தினம் (23) இடம்பெற்றது.

இவ்விசேட கூட்டத்தின்போது உரையாற்றுகையிலேயே நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபொட மேற்கண்டவாறு தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

''விபத்து இடம்பெற்ற நானுஓயா ரதெல்ல வீதியை மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே ஞாயிற்றுக்கிழமை (22) அவதானித்தார்.

தற்போது நடைமுறையில் இருக்கும் நுவரெலியா - ஹட்டன் பிரதான வீதியில் நானுஓயா குறுக்கு வீதியில் கனரக வாகனங்கள் பயணிப்பதற்கு விதிக்கப்பட்ட தடை தொடர்ந்து நடைமுறையில் இருக்கும். குறித்த வீதி மிகவும் செங்குத்தாக இருப்பதால் அதிக விபத்துக்கள் இடம்பெறுகின்றன. இதனால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த வெள்ளிக்கிழமை குறித்த வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 3 சிறுவர்கள் உட்பட 7 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வீதி தொடர்பாக எதிர்வரும் மாவட்ட அபிவிருத்திக் கூட்டத்தின்போது முக்கிய கவனம் செலுத்தி நிரந்தர முடிவு எடுக்கப்படும்''- என தெரிவித்தார்.

# நுவரெலியா – பதுளை பிரதான வீதிகளில் சுற்றித்திரியும் மட்டக்குதிரைகளால் ஆபத்து

## மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர்கள் இருவர் படுகாயம்; உயிரிழப்புகளை தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

(செ.திவாகரன்)



நுவரெலியா - பதுளை பிரதான வீதியில் நேற்று இடம்பெற்ற மோட்டார்சைக்கிள் விபத்தில் இளைஞர்இருவர்படுகாயமடைந்துள்ளனர்.

இளைஞர்கள் இருவர் மார்காஸ் தோட்ட பகுதியிலிருந்து நுவரெலியா பிரதான நகரை நோக்கி மோட்டார்சைக்கிளில் பயணித்த வேளை அவ்வழியாக வந்த மட்டக்குதிரை மீது மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

குறிப்பாக நுவரெலியா-கண்டி, நுவரெலியா- உடப்புஸ்ஸல்லாவ, நுவரெலியா-பதுளை போன்ற பிரதான வீதிகளில் அரசு மற்றும் தனியார் பஸ்கள், பாடசாலை வாகனங்கள், அரசுத்துறை சார்ந்த வாகனங்கள், கனரக வாகனங்கள் முதல் சிறிய ரக வாகனங்கள் வரை பயணிக்கின்றன. போக்குவரத்து நெரிசல் மிகுந்த இந்த வீதியில் 30இற்கும் மேற்பட்ட மட்டக்குதிரைகள் தினமும் சுற்றித் திரிகின்றன. இவை போக்குவரத்துக்கு இடையூறாக உள்ளன. மட்டக்குதிரைகள் வீதியில் ஆங்காங்கே படுத்து ஓய்வெடுக்கின்றன. இதனால் அப்பகுதியூடாக பயணிக்கின்ற வாகன சாரதிகள், குறிப்பாக இருசக்கர வாகனங்களும், முச்சக்கரவண்டிகளும் அதிகமாக மட்டக் குதிரை நகரும் திசையை கணிக்க முடியாமல் மோதி விபத்தில் சிக்கி வருகின்றனர்.

இதனால் அவ்வழியாக வாகனங்கள் செல்ல முடியாமல் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதுடன், அடிக்கடி வாகன விபத்து ஏற்பட்டு உயிரிழப்பு ஏற்படுவதும், காயமடைவதும் தொடர்கதையாகி வருகின்றது என அப்பகுதி மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

மேலும், இவ்வாறான விபத்துகளில் சிக்கி உயிரிழப்புகள் ஏற்படுவதற்கு முன்னர் பிரதான வீதிகளில் சுற்றித்திரியும் மட்டக்குதிரைகளை அப்புறப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும், இப்பிரச்சினையின் தீவிரத்தை உணர்ந்து மட்டக்குதிரை வளர்ப்போருக்கு உரிய விழிப்புணர்வை ஏற்படுத்தி, அதையும் மீறும் பட்சத்தில் மட்டக்குதிரையை பறிமுதல் செய்து, அதிகரித்த தண்டப்பணத்தை விதிக்க வேண்டும் எனவும் பொதுமக்களும், வாகன சாரதிகளும் கோரிக்கை விடுக்கின்றனர்.

# தீயில் சேதமடைந்த குடியிருப்பை மீள் நிர்மாணிக்க உதயகுமார் எம்.பி. உதவி



(தலவாக்கலை நிருபர்)

தலவாக்கலை மிடில்டன் தோட்ட லயன் குடியிருப்பில் ஏற்பட்ட தீ விபத்தில் சேதமடைந்த வீடுகளை மீள்நிர்மாணம் செய்து கொள்ள, தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித்தலைவரும்நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமாகிய மயில் வாகனம்உதயகுமாரால்கட்டுமானப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

தீ விபத்தினால் சேதமடைந்த குடியிருப்புக்களை நேரில் சென்று பார்வையிட்ட உதயகுமார் எம்.பி. பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து ஆறுதல் கூறியதுடன் அவர்களின் அடிப்படைத் தேவைகள் குறித்தும் கேட்டறிந்தார்.

தொழிலாளர்களின் லயன் குடியிருப்புகளில் ஏற்படும் தீ விபத்துகளின்போது அவர்களுக்கு காப்புறுதி நட்டஈடு பெற்றுக் கொடுக்கும் வகையில் உரிய தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## உள்ளூராட்சி மன்றத் தேர்தல் - இரத்தினபுரி மாவட்டம்:

# 423 உறுப்பினர்களை தெரிவுசெய்ய களத்தில் 63,516 வேட்பாளர்கள்

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள 17 உள்ளூராட்சி மன்றங்களுக்கு 423 உறுப்பினர்களைத் தெரிவு செய்ய 63,516 வேட்பாளர்கள் களத்தில் போட்டியிடுகின்றனர்.

இரத்தினபுரி மாவட்டத்தில் ஒரு மாநகர சபை மற்றும் இரண்டு நகர சபைகள், 14 பிரதேச சபைகளின் அதிகாரங்களை கைப்பற்றுவதற்காக பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி, தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் சக்தி, பெரட்டுகாமி ஜனநாயக முன்னணி, சோஷலிசக் கட்சி உட்பட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள், பல சுயேச்சைக் குழுக்கள் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுகின்றன.

தேர்தலுக்காக 148 கட்சிகளும், சுயேச்சை அணிகளும் கட்டுப்பணம் செலுத்தியிருந்த போதிலும் 134 அரசியல் கட்சிகளும், 6 சுயேச்சை அணிகளும் மாத்திரமே வேட்பு மனுத் தாக்கல் செய்திருந்தன. இவற்றில் ஐந்து அரசியல் கட்சிகள் ஒரு சுயேச்சை அணி ஆகியவற்றின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

எஹலியகொடை பிரதேச சபைக்கு ஐக்கிய சோசலிஷ முன்னணி, குருவிட்ட பிரதேச சபைக்கு பெரட்டுகாமி சோசலிஷக் கட்சி மற்றும் ஒரு சுயேச்சை அணி, கலவான பிரதேச சபைக்கு பெரட்டுகாமி சோசலிஷக் கட்சி ஜனநாயக முன்னணி மற்றும் கொலன்ன, பெல்மதுளை பிரதேச சபைகளின் இரு வேட்பு மனுக்களும் நிராகரிக்கப்பட்டன. மேலும் வேட்புமனு ஏற்றுக்கொள்ளப்பட்ட இரண்டு கட்சிகளில் இருவரின் பெயர்கள் அதிகாரிகளால் நிராகரிக்கப்பட்டன. இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள 9,11,381 வாக்காளர்கள் 423 உறுப்பினர்களைத் தெரிவு செய்ய வாக்களிக்கவுள்ளனர். இம்மாவட்டத்தில் 258 உறுப்பினர்கள் நேரடி வாக்குகள் மூலமும், 156 உறுப்பினர்கள் விகிதாசார முறையிலும் தெரிவு செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# நெதர்லாந்து தூதுவர் யாழ் SK விவசாயப் பண்ணைக்கு விஜயம்



(யாழ். நிருபர்)

யாழ். மாவட்டம் ஆழியவளை உலந்தைக்காடு SK விவசாயப் பண்ணைக்கு இலங்கைக்கான நெதர்லாந்து தூதுவர் Bonnie Horbech நேற்று முன்தினம் (23) விஜயம் மேற்கொண்டார்.

SK விவசாயப் பண்ணையானது நெதர்லாந்தைச் சேர்ந்த பெண்மணி ஒருவரால் நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி விஜயத்தின்போது நெதர்லாந்து தூதுவர் குறித்த விவசாயப் பண்ணையை நடத்தும் அதே நாட்டைச் சேர்ந்த பெண்மணியின் குறித்த விவசாய ஈடுபாட்டிற்கு வாழ்த்துகளைத் தெரிவித்ததோடு, அவரது பண்ணையை சுற்றிப்பார்த்து கால்நடை வளர்ப்பு உள்ளிட்ட தென்னை மற்றும் ஏனைய பயிர்ச்செய்கை செயற்பாடுகள் குறித்து பெருமைப்படுவதாகவும் கூறினார்.





மேலும், யுத்தத்தின் பின்னர் குறித்த பகுதியில் வாழும் மக்களின் இன்றைய நிலை குறித்து கேட்டறிந்துகொண்டதோடு, மக்களின் வாழ்வாதார நிலை குறித்தும் அறிந்துகொண்டார். அதுமட்டுமன்றி, குறித்த விவசாயப் பண்ணையால் பிரதேச மக்களுக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொடுத்து அவர்களது வாழ்க்கைத்தரத்தை உயர்த்த முடியுமென்றும் இதன்போது நம்பிக்கை தெரிவித்தார்.

# மன்னார் பேசாலை கடற்கரையில் கரையொதுங்கிய மீனவரின் சடலம்

(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் பேசாலை கடற்கரையிலிருந்து கடந்த 20ஆம் திகதி மீன்பிடிக்க கடலுக்குச் சென்ற மீனவர் ஒருவர் நேற்று முன்தினம் (23) காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்ட மீனவர் கிளிநொச்சி பகுதியைச் சேர்ந்த தற்போது பேசாலை பகுதியில் வசித்துவரும் இளம் குடும்பஸ்தரான 26 வயதுடைய கஸ்டார் அலெக்ஸ் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

கிளிநொச்சி கோணாவில் யூனியன் குளம் பகுதியைச் சேர்ந்த கஸ்டார் அலெக்ஸ் (வயது-26) இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார். இவர் பேசாலையில் குடும்பத்துடன் தங்கியிருந்து கடந்த சில மாதங்களாக மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றார்.

இந்நிலையில், கடந்த 20ஆம் திகதி குறித்த மீனவர் பேசாலை கடற்கரை மீன்பிடித் துறைமுகத்தில் படகு மூலம் (றோலர்) கடலுக்குள் மாலை 3 மணியளவில் மீன்பிடிக்கச் சென்றுள்ளார். இவருடன் மேலும் இரண்டு மீனவர்கள் சென்றுள்ளனர்.

அவர்கள் கடலுக்குள் மீன்பிடித்தலில் ஈடுபட்ட சந்தர்ப்பத்தில் இவர்களது தொழிலை மேற்கொள்ளும் டோலர் படகின் பிரதான வலை கிழிந்த நிலையில் அதை சீர்செய்து மீண்டும் தொழிலில் ஈடுபட்ட சந்தர்ப்பத்தில் அவர்கள் மேற்கொண்ட தொழிலில் மீன்பாடு இல்லாத நிலையில் இரவு சுமார் 9.30 மணியளவில் பேசாலை கரைக்குத் திரும்பி கடற்கரைக்கு சற்று தொலைவில் படகை நங்கூரமிட்டு குறித்த 3 நபர்களும் நீந்தி கரைக்கு வந்துள்ளனர்.

இதன்போது ஒருவர் தாமதமாகியும் கரைக்கு வராத நிலையில் காணாமல்போயுள்ளார். குறித்த நேரத்தில் அவரை தேடிய மற்றைய இரண்டு மீனவர்களும் உரிமையாளரிடம் முறையிட்டு பேசாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டையும் பதிவு செய்துள்ளனர்.

இந்நிலையில், குறித்த நபரின் சடலம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (23) காலை பேசாலை மீன்பிடி துறைமுகத்திற்கு மேற்கு பக்கமாக கரை ஒதுங்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

இவருடன் தொழிலுக்குச் சென்ற இரண்டு நபர்கள் மற்றும் அவரது மனைவி, உறவினர், தொழில் உரிமையாளர் ஆகியோரிடம் பேசாலை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சடலம் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# யாழில் ஆவா குழு ரௌடிகளுக்குள் மோதல்; வாள்வெட்டுத் தாக்குதல்!



யாழ்ப்பாணம், சுன்னாகத்தில் ஆவா குழு ரௌடிகள் வாகனங்களால் மோதி விபத்தை ஏற்படுத்தி, வாள்வெட்டுத் தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர்.

ஆவா குழு ரௌடிகளுக்கிடையில் ஏற்பட்ட முரண்பாட்டையடுத்து, அந்த குழுவுக்குள்ளேயே இந்த மோதல் நடந்தது.

நேற்று பகல் சுன்னாகம் சந்திக்கு அண்மையில் இந்த பயங்கர மோதல் நடந்துள்ளது.

கார் ஒன்றில் வந்த ஆவா குழுவினரை, வாகனமொன்றில் வந்த மற்றொரு பிரிவு ஆவா குழுவினர் தாக்கியுள்ளனர். தமது வாகனத்தினால் காரை மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டு, காருக்குள் இருந்த ஆவா குழுவினர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதில் காருக்குள் இருந்த 4 ஆவா குழுவினர் காயமடைந்து, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பட்டப்பகலில் இந்த அதிர்ச்சி சம்பவம் நடந்துள்ளது.

ஆவா குழு ரௌடிகளுக்குள் ஏற்பட்ட முரண்பாட்டையடுத்து, இரு குழுவாகப் பிரிந்து இந்த மோதலில் ஈடுபட்டுள்ளனர்.



# சுன்னாகம் வாள்வெட்டு சம்பவ சந்தேக நபர்களை கைது செய்க!

## வட மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் மகிந்த உத்தரவு

(யாழ்.நிருபர் )



சுன்னாகத்தில் வாள்வெட்டு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களை உடனடியாக கைது செய்யுமாறு வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் மகிந்த குணரட்ண உத்தரவிட்டுள்ளார்.

சுன்னாகம் பகுதியில் நேற்று மதியம் சினிமா பாணியில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவம் தொடர்பில் உடனடியாக விசாரணை நடத்தி சம்பந்தப்பட்டோரை கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்துமாறு வடக்கு மாகாண சிரேஸ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் மகிந்த குணரட்ண யாழ்ப்பாண மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர், யாழ்ப்பாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு உத்தரவிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் செயல்படும் இரண்டு குழுக்களுக்கு இடையில் நீண்டகாலமாக இடம்பெற்று வரும் முரண்பாட்டின் காரணமாகவே இந்த வாள்வெட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

எனினும், பட்டப்பகலில் பொதுமக்கள் பார்த்திருக்க இந்த சம்பவம் இடம்பெற்றதை ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே உடனடியாக தாக்குதலுடன் சம்பந்தப்பட்டவர்களை கைது செய்யுமாறு உத்தரவிட்டுள்ளதோடு குறித்த தாக்குதல் சம்பந்தமான பூரண அறிக்கை ஒன்றினை சமர்ப்பிக்குமாறு கோரியுள்ளதாகவும் வடக்கு மாகாண சிரேஸ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

# 13 ஐ அமுல்படுத்துவதிலுள்ள அச்சம் குறித்து இந்தியாவையும் இலங்கைத் தலைவர்களையும் தெளிவுபடுத்துவது அவசியம்!

## முஸ்லிம் தலைமைகளின் பொறுப்பு என்கிறார் சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட்



அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தும் முயற்சிகள் மும்முரமாகியுள்ளதால், இது குறித்து முஸ்லிம் தலைமைகள் கூடிய கவனம் எடுக்க வேண்டும் - என சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

இத்திருத்தம் முழுமையாக அமுல்படுத்தப் படுமானால், முஸ்லிம்கள் சார்பில் மேற்கொள்ள வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டிய பொறுப்பிலிருந்து முஸ்லிம் தலைமைகள் விலகி நிற்கக்கூடாது என்றும் அமைச்சர் நஸீர் அஹமட் மேலும் தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கைத் தமிழர்களின் அரசியல் தீர்வு குறித்து அண்மைக்காலமாக இந்தியா அதிக அக்கறை செலுத்தி வருகிறது. புரையோடிப்போயுள்ள நாட்டின் தேசிய அரசியல் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் வகிபாகத்திலிருந்து இந்தியா ஒதுங்கிவிடாது. இந்த வகையில்தான், இந்திய வெளியுறவு அமைச்சரின் வருகையும் அமைந்துள்ளது.

வடக்கும் கிழக்கும் தமிழர்களின் மாகாணம். "இணைக்கப்பட்ட வடக்கு - கிழக்கில் காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்கல், சமஷ்டிக்கு நிகரான தீர்வுக்கு வித்திடல்" போன்ற நிலைப்பாட்டில் இந்தியா உள்ளது. இந்தியாவின் இந்த நிலைப்பாடுகள், முஸ்லிம்களுக்கு ஏற்படுத்தும் அச்சம் குறித்து இந்திய அரசாங்கத்தை தெளிவுபடுத்துவது முஸ்லிம் தலைமைகளின் பொறுப்பு. தமிழரின் தாயகம் என்ற வார்த்தைப் பிரயோகம் தமிழ் பேசும் முஸ்லிம்களையும் உள்ளடக்கியதா?அவ்வாறானால், இம்மாகாணங் களிலுள்ள முஸ்லிம்களின் காணிகளுக்கு உத்தரவாதம் என்ன? கடந்த காலங்களில் பறிபோன முஸ்லிம்களின் காணிகளை மீளப்பெறுவது எப்படி? இவற்றை மீள ஒப்படைப்பது யார்? மட்டக்களப்பு மாவட்டத்தில், அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிளின் பலவந்தத்தால் பறிக்கப்பட்ட முஸ்லிம்களின் காணிகளை மீள ஒப்படைப்பது யார்? எல்லைகளைச் சுருக்கி ஒரு குறுகிய நிலப்பரப்புக்குள் முஸ்லிம்களை முடக்கியுள்ள இன ஒடுக்குமுறைகள், இனியும் நடைபெறாது என்பதை எந்தத் தரப்பு உத்தரவாதப்படுத்துவது? விரட்டப்பட்ட முஸ்லிம்களை மீளக் குடியேற்றுவது எப்போது?,அழிக்கப்பட்ட முஸ்லிம்களின் சொத்துகளுக்குப் பரிகாரமாக முன்வைக்கப்படும் முன்மொழிவுகள் என்ன? தமிழ் பயங்கரவாதத்தால் பறிக்கப்பட்ட காணிகளைப் பெறுவது எப்படி?

இதுபோன்ற சந்தேகங்களை களைந்தே, அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும். தீர்வைக் குலைப்பதோ அல்லது இழுத்தடிப்பதோ முஸ்லிம்களின் நோக்கம் அல்ல. கடந்த காலங்களில் இந்த ஒப்பந்தம் வடக்கு, கிழக்கு மாகாண முஸ்லிம்களை கைவிட்டிருந்ததுடன், ஓரங்கட்டியும் இருந்தது. முஸ்லிம்களுக்கு இந்த ஒப்பந்தத்தில் சந்தேகம் ஏற்பட இதுவே காரணம். எனவே, நாட்டின் நிரந்தரத் தீர்வுக்கு 13ஐ முழுமையாக அமுல்படுத்துவதுதான் தீர்வாக அமைந்தால், அதையும் ஏற்க முஸ்லிம்கள் தயார்தான்.

ஆனால், இந்திய -இலங்கை ஒப்பந்தத்தால் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட அநீதிக்கு நியாயந்தருவது, இதை அமுல்படுத்துகையில் முஸ்லிம்களுக்கு ஏற்படும் தீங்குகளை நீக்குவது மற்றும் தமிழ் மொழித் தேசியத்துக்குள் முஸ்லிம்களையும் உள்வாங்குவதாகக்கூறி இடையில் காலைவாரும் சூழ்ச்சிகளை நிறுத்துவது உள்ளிட்ட ஏற்பாடுகளை இந்தியா முன்னெடுக்க வேண்டும்.

இது குறித்து இந்தியாவுக்குத் தெளிவுபடுத்த முஸ்லிம் தலைமைகள் முன்வருவது அவசியம். தமிழ்த் தேசியத்துக்குள் முஸ்லிம்களையும் உள்வாங்க முனையும் தமிழ்த் தலைமைகள் இதுபற்றி மனந்திறந்து முஸ்லிம்களுடன் பேசாதுள்ளதுதான் பாரிய சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனவே, இந்தியாவோ அல்லது வேறெந்த தரப்பினரோ முயற்சிகளால் கொண்டுவரப்படும் தீர்வுகள் முஸ்லிம்களை திருப்திப்படுத்தாது அமைந்தால், அது நிரந்தரத் தீர்வாக அமையாதென்பதை உறுதியுடன் கூறுகின்றேன் - என்றார்.

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலால் நாட்டில் ஆட்சிமாற்றம் ஏற்படப்போவதில்லை

## அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு

(எஸ்.கணேசன்)



உள்ளூராட்சி மன்றத் தேர்தலால் நாட்டில் ஆட்சிமாற்றம் ஏற்படப்போவதில்லை. எனவே, தற்போதைய பொருளாதார நெருக்கடியில் நிதியை மக்கள் நலன்களுக்காகவே பயன்படுத்த வேண்டும் - என்று இ.தொ.காவின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட வுள்ள அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் பொதுச் செயலாளர் களுக்கும், தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கும் இடையிலான விசேட கலந்துரையாடலொன்று தேர்தல் ஆணைக் குழுவில் நேற்று (24) நடைபெற்றது.

இதன்போது தேர்தலுக்கான நிதி, பிரசாரம் உட்பட பல விடயங்கள் தொடர்பில் கலந்துரை யாடப்பட்டுள்ளன.

இச்சந்திப்பின் பிறகு ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அமைச்சர் ஜீவன் தொண்டமான்,

"பல மில்லியன் ரூபாக்களை செலவழித்து உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதால் ஆட்சி மாறப்போவதில்லை. பொருளாதார நெருக்கடியும் தீரப்போவதில்லை. இது தொடர்பில் எனது நிலைப்பாட்டை ஏற்கனவே அறிவித்துள்ளேன்.

தற்போதைய சூழ்நிலையில் நாட்டு மக்களுக்கு தேர்தல் குறித்த எண்ணம் இல்லை. அடுத்தவேளை உணவு பற்றிய ஐயப்பாடு பலருக்கும் உள்ளது. பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவது தொடர்பில் பிரச்சினை உள்ளது. எனவே, மக்களின் நலன்களுக்கே தற்போது முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும்.

நான் தேர்தலுக்கு எதிரானவன் அல்லன். ஆனாலும் தேர்தலை நீதியாகவும், நியாயமாகவும் நடத்துவதற்கு ஏதுவான சூழ்நிலை இருக்க வேண்டும்" - என்றார்.

# கித்துல்கல நீர் விளையாட்டு தொடர்பில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் ஆராய குழு நியமனம்





கித்துல்கல பிரதேசத்தை மையமாகக்கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் உலகப் பிரசித்தி பெற்ற வைட் வோடர் ராப்டிங் (White Water Rafting) நீர் விளையாட்டில் பிரோட்லண்ட் நீர்மின் திட்டத்தினால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து, சாத்தியமான தீர்வுகளைப் பரிந்துரை செய்வதற்காக குழுவொன்றை நியமிக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க பணிப்புரை விடுத்துள்ளார்.

பிரோட்லண்ட் நீர்மின் திட்டத்தினால் கித்துல் கல வைட் வோடர் ராப்டிங் விளையாட்டு தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகள் மற்றும் அதற்கான தீர்வுகள் தொடர்பில் ஆராய்வதற்காக நேற்றுமுன்தினம் (23) பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடத்தப்பட்ட கலந்துரையாடலின் போதே ஜனாதிபதியின் செயலாளர் மேற்படி பணிப்புரையை வழங்கினார்.

சுற்றுலாத்துறை அமைச்சு மற்றும் துறைசார் நிறுவனங்களின் அதிகாரிகளை உள்ளடக்கிய வகையில் நியமிக்கப்படவுள்ள இக்குழுவானது, குறிப்பிட்ட விடயம் தொடர்பில் கள விசாரணை நடத்தி இரண்டு வாரங்களுக்குள் அதற்கான அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டுமெனவும் ஜனாதிபதியின் செயலாளர் இக்கூட்டத்தில் ஆலோசனை வழங்கினார்.

கித்துல்கலவை அண்மித்த பகுதியில் நடத்தப் படும் வைட் வோடர் ராப்டிங் விளையாட்டு, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை வெகுவாகக் கவர்ந்துள்ளது.

பிரோட்லண்ட் நீர்மின் திட்டம் காரணமாக கித்துல்கல வைட் வோடர் ராப்டிங் விளையாட்டு மற்றும் அதனுடன் தொடர்புபட்ட விடயங்களில் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அதனுடன் தொடர்புடைய சேவைகளை வழங்கும் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதன்காரணமாக தமது வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடும் மேற்படி மக்கள், நாட்டுக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித் தரக்கூடிய இந்த விளையாட்டை பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக் கொண்டுள் ளனர்.

இக்கலந்துரையாடலில் கலந்துகொண்ட பிரோட்லண்ட் நீர்மின் திட்டப் பணிப்பாளர், தற்போதுள்ள தொழில்நுட்ப ஏற்பாடுகளுக்கு அமைய கித்துல்கல வைட் வோடர் ராப்டிங் சேவை வழங்குநர்களுடன் ஒத்துழைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டினார்.

எனினும், அதனுடன் தொடர்புபட்ட சேவைகளை வழங்கும் மக்களால் சுட்டிக்காட்டப் பட்டுள்ள நடைமுறைச் சிக்கல்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்திய ஜனாதிபதியின் செயலாளர், கூடிய விரைவில் அதற்கான தீர்வுகளை வழங்குமாறும் அதிகாரி களுக்குப் பணிப்புரை வழங்கினார்.

பாராளுமன்ற உறுப்பினர் ராஜிகா விக்கிரமசிங்க மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் கே.மகேசன், நீர்ப்பாசன அமைச்சின் செயலாளர் யு.டி.சி. ஜயலால் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு, இலங்கை மின்சார சபை, மத்திய சுற்றாடல் அதிகாரசபை உள்ளிட்ட துறை சார் நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

# தேர்தல் ஆணைக்குழுவுக்கு புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்படலாம்




இன்னும் சில தினங்களில் தேர்தல் ஆணைக்குழுவுக்கு புதிய உறுப்பினர்கள் நியமிக் கப்படவுள்ளதாக நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்காக இன்று (25) புதன்கிழமை சபாநாயகர்மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் அரசிய லமைப்பு சபை கூடவுள்ளது.


இது தவிர, ஏனைய சுயாதீன ஆணைக் குழுக்களுக்கும் அடுத்த சில நாட்களில் புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.


அரசியலமைப்புப் பேரவைக்கு பிரதான எதிர்க் கட்சியல்லாத ஏனைய எதிர்க் கட்சிகளின் பிரதிநிதிகள் நியமிக்கப்படவில்லை எனவும், இது தொடர்பில் இன்று புதன்கிழமை நடைபெறும் கூட்டத்தின்போது தீர்மானம் எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அரசியலமைப்பு சபைக்கான மூன்று சிவில் பிரதிநிதிகள் அண்மையில் நியமிக் கப்பட்டனர்.

இருபத்தியோராம் அரசியலமைப்புத் திருத்தத்தின் விதிகளின்படி அரசியலமைப்பு சபை நிறுவப்பட்டது. புதிய அரசியலமைப்பு சபை நியமிக்கப்பட்டதன் பின்னர், சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டு மீண்டும் நிறுவப்பட வேண்டும்.

# புத்தளம் பதுலு ஓயா பாலத்தில் விழுந்த எரிபொருள் பவுசர்





(உடப்பு நிருபர்)

புத்தளம்- கொழும்பு பிரதான வீதியின் பத்துளுஓயா பகுதியிலுள்ள பாலத்தினுள் எரிபொருள் பவுசர் ஒன்று நேற்று செவ்வாய்க் கிழமை (24) அதிகாலை 3.30 மணியளவில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாக முந்தல் பொலிஸார் தெரிவித்தனர்.

சபுகஸ்கந்தையிலிருந்து வந்து பாலாவி சீமெந்து தொழிற்சாலையில் எரிபொருளை வழங்கி விட்டு கொழும்பு நோக்கி சென்றுகொண்டிருந்த வேளை பதுலு ஓயாவை அண்மித்ததும் சாரதிக்கு ஏற்பட்ட நித்திரையின் காரணமாக பாலத்தின் பாதுகாப்பு வேலியை உடைத்துக் கொண்டு பதுலு ஓயா நீர்த்தேக்கத்தினுள் விழுந்து சாரதி காயமடைந்து சிலாபம் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக முந்தல் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்துக்குள்ளான சாரதியை பொலிஸாரும் பொதுமக்களும் இணைந்து மீட்டெடுத்து வைத்தியசாலையில் சேர்த்துள்ளதுடன், பாலத்தினுள் விழுந்துள்ள எரிபொருள் பவுசர் விழுந்த இடத்திலிருந்து புகையிரதப் பாதை பாலத்தை அண்டிய பகுதியில் நேற்றுமாலை வரை காணக்கூடியதாக இருந்தது.

# புதிய உயர்ஸ்தானிகர் ஒருவர் உட்பட்ட நியமனங்களுக்கு பாராளுமன்ற உயர் பதவிகள் பற்றிய குழுவின் அனுமதி

புதிய உயர்ஸ்தானிகர் ஒருவர், தூதுவர் ஒருவர் மற்றும் நிறுவனத் தலைவர்கள் இருவரை நியமிப்பதற்கு பாராளுமன்ற உயர் பதவிகள் பற்றிய குழுவின் அனுமதி அண்மையில் (20) வழங்கப்பட்டதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்ற உயர் பதவிகள் பற்றிய குழு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் அண்மையில் (20) பாராளுமன்றத்தில் கூடியது.

அதற்கமைய, அவுஸ்திரேலியாவுக்கான புதிய இலங்கை உயர்ஸ்தானிகராக திருமதி சித்ராங்கனி வாகிஸ்வரவை நியமிப்பதற்கு பாராளுமன்ற உயர் பதவிகள் பற்றிய குழுவின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் அரசுக்கான புதிய தூதுவராக எம்.எச்.எம்.என்.பண்டாவின் நியமனத்துக்கும் உயர் பதவிகள் பற்றிய குழுவின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, கமத்தொழில் அமைச்சின் புதிய செயலாளராக குணதாச சமரசிங்கவின் நியமனமும் உயர் பதவிகள் பற்றிய குழுவில் அனுமதிக்கப்பட்டதாக தம்மிக்க தசநாயக்க குறிப்பிட்டார். மேலும், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் புதிய தலைவராக சி.பீ.அதுலுவகேவின் நியமனம் மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபையின் புதிய தலைவராக என்.கே.ஏ.ஜீ.நாரகலவின் நியமனமும் உயர் பதவிகள் பற்றிய குழுவில் அனுமதிக்கப்பட்டதாக செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

# ஜனாஸாக்கள் எரியூட்டப்படாமல் தடுக்க உதவியவர் மறைந்த டாக்டர் தஸ்தகீர்



## அனுதாபச் செய்தியில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

கொவிட்-19 வைரஸ் தொற்றின்போது மரணித்தவர்களின் ஜனாஸாக்கள் எரிக்கப்படுவதை இயன்றவரை தடுப்பதில் மறைந்த டாக்டர் ஏ.எல்.தஸ்தகீர் பெரிதும் ஒத்துழைத்ததாக அவரது மறைவையிட்டு விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டுள்ளார்.

அதில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சமூக சேவையாளரும் கொழும்பு புதுக்கடை வாழைத்தோட்ட பிரதேசத்தில் நீண்டகாலமாக மருத்துவத்துறையில் ஈடுபட்டுவந்தவருமான நண்பர் டாக்டர் ஏ.எல்.தஸ்தகீர் நோய்வாய்பட்டிருந்த நிலையில் காலமானதை அறிந்து ஆழ்ந்த கவலைடைகின்றேன்.

மன்னார் பெருநிலப்பரப்பில், பெரியமடுவைச் சேர்ந்த மர்ஹூம் டாக்டர் தஸ்தகீர், எமது பெருந்தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரபின் காலத்திலிருந்தே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை குறிப்பாக வன்னி, புத்தளம், கொழும்பு ஆகிய மாவட்டங்களில் மக்கள் மயப்படுத்துவதில் அளப்பரிய பங்காற்றியதோடு, நீண்டகாலமாக கட்சியின் உயர்பீட உறுப்பினராகவும் பணிபுரிந்துள்ளார்.

முன்னாள் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், அமைச்சருமான நூர்தீன் மஷூர் உடனும் அவர் நெருங்கிய தொடர்பைக்கொண்டிருந்தார்.

கொழும்பு வாழைத்தோட்ட பிரதேசத்தில் பிறப்பு, இறப்பு பதிவாளராகவும் அவர் அதிக காலம் சேவையாற்றியுள்ளதோடு, கொவிட்-19 (கொரோனா) நோய்த் தொற்றால் மரணமானோரின் ஜனாஸாக்களை எரியூட்டாமல் தடுப்பதிலும் இயன்றவரை ஒத்துழைத்துள்ளார்.

சகல சமூகத்தினராலும் நன்கு மதிக்கப்பட்ட அவர் புன்னகை பூத்த முகத்துடன் அனைவருடனும் நளினமாகப் பழகும் இயல்பைக் கொண்டிருந்தார். அத்துடன், தமது பிறந்த மண்ணிலும் வாழ்ந்த மண்ணிலும் வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் அவர் கூடுதல் கவனஞ் செலுத்தி வந்தார்.

எல்லாம்வல்ல அல்லாஹ் அன்னாருக்கு மஃபிரத்தையும், ஜன்னதுல் பிர்தௌஸுல் அஃலா என்ற மேலான சுவன பாக்கியத்தையும் வழங்குவதோடு, அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் மனைவி, மகன், மகள் மற்றும் உறவினர்கள் அனைவருக்கும் மன ஆறுதலையும் அளிப்பானாக.

# அஜ்வாத் அல்-பாஸி அரபுக் கல்லூரியில் ஞாயிற்றுக்கிழமை பட்டமளிப்பு விழா

(பேருவளை பீ.எம்.முக்தார்)

கொழும்பு உம்மு ஸாவியாவில் இயங்கும் அஜ்வாத் அல்-பாஸி அரபுக் கல்லூரியின் எட்டாவது அல்-ஆலிம் பட்டமளிப்பு விழாவும் 25ஆவது வருட பூர்த்தி வைபவமும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 8.30 மணிக்கு உம்மு ஸாவியாவில் மிக விமரிசையாக நடைபெறும்.

விழாவுக்கு உம்மு ஸாவியாவில் நிர்வாக சபைத் தலைவர் தேசபந்து அல்-ஹாஜ் எம்.மக்கி ஹாஷிம் தலைமை வகிப்பார். சங்கைக்குரிய அஷ்ஷெய்க் அஸ்ஸெய்யித் முஹம்மத் அஸ்லம் ஜிப்ரி மௌலானா, அகில இலங்கை ரிபாய் தரீக் சங்க ஆயுட்காலத் தலைவர் அஷ்ஷெய்க் அஸ்ஸெய்யித் யு.பி.முஹம்மத் ஆசிக் தங்கள், அஷ்ஷெய்க் அஸ்ஸெய்யித் முஹம்மத் பசீர் தங்கள், அஷ்ஷெய்க் அஸ்ஸெய்யித் ஏ.எல்.அத்துகோயா தங்கள் ஆகியோரின் பங்குபற்றலுடனும் நடைபெறும் இவ்விழாவில் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அஹ்ஸன் ராஸிக் மரிக்கார் பிரதம அதிதியாக கலந்துகொள்வார் - என கலாபீட முதல்வர் கலீபதுஷ்ஷாதுலி மௌலவி எம்.எஸ்.எம்.அஹமத் (மஹ்ழரி) தெரிவித்தார்.

தொழிலதிபர்களான அல்-ஹாஜ் இல்யாஸ் அப்துல் கரீம், அல்-ஹாஜ் ஹுஸைன் ஹாசிம் ஆகியோர் விசேட அதிதிகளாகவும், அல்-ஹாஜ் எம்.எச்.ஏ.ரஸ்ஸாக், அல்-ஹாஜ் எம்.எச்.ஹாஜா ஹுஸைன், அல்-ஹாஜ் முஸ்தாக் நவ்பல் ஜாபிர் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் பங்குபற்றுவர்.

கலீபதுஷ்ஷாதுலி மௌலவி அஸ்ஸெய்யித் அலவி ஸாலிஹ் மௌலானா (முர்ஸி) ரயீஸுல் மூகத்தமுஷ்ஷாதுலி மௌலவி எம்.இக்ராம் நிஸார் (அல்-பாஸி) ஆகியோர் விசேட பேச்சாளர்களாகவும் கலந்துகொள்வர்.

2020, 2021, 2022 ஆண்டுகளில் பரீட்சை எழுதி சித்தியடைந்த 18 பேருக்கு விழாவில் சான்றிதழ் வழங்கப்படும்.

கலாபீட விரிவுரையாளர் மௌலவி ரயீஸுல் முகத்தமுஷ்ஷாதுலி முஹம்மத் பாஸில் பாரூக் (பஹ்ஜி) யினால் எழுதப்பட்ட உம்மு ஸாவியா மற்றும் அஜ்வாத் அல்-பாஸி அரபுக் கல்லூரி வரலாறு தொடர்பான நூல் ஒன்றும் இதன்போது வெளியிட்டு வைக்கப்படும்.

கலாபீட நிர்வாக சபைத் தலைவர் நுஸ்கி முஹம்மத் உட்பட நிர்வாகிகள், உம்மு ஸாவியா நிர்வாக சபை உறுப்பினர்கள் உலமாக்கள், புத்திஜீவிகள் என பலரும் பங்குபற்றுவர்.

# ஐ.சி.சியின் ஆண்டின் சிறந்த அணியில் அடுத்தடுத்து இடம்பெற்ற நம்மவர் ஹசரங்க

சர்வதேச கிரிக்கெட் பேரவையானது ஒவ்வொரு ஆண்டும் சிறப்பாக ஆடிய வீரர்களை வைத்து ஆண்டின் சிறந்த அணியை வெளியிட்டு வருகிறது. அந்தவகையில் இலங்கையின் நட்சத்திர சகலதுறை வீரராக வனிந்து ஹசரங்க 2022ஆம் ஆண்டுக்கான சிறந்த இருபதுக்கு 20 அணியில் இடம்பிடித்துள்ளார்.

வனிந்து ஹஸரங்க கடந்த ஆண்டு 19 போட்டிகளில் 35 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். அதுமாத்திரமன்றி இலங்கை அணி ஆசியக் கிண்ணத்தை வெற்றிகொள்ள முக்கிய காரணமாக இருந்த இவர், 6 போட்டிகளில் 9 விக்கெட்டுகளை சாய்த்ததுடன், துடுப்பாட்டத்திலும் பிரகாசித்திருந்தார். மேலும் வனிந்து ஹசரங்க 2021ஆம் ஆண்டும் ஐ.சி.சியின் சிறந்த இருபதுக்கு 20




விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

அணியில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**ஐ.சி.சியின் 2022ஆம் ஆண்டுக்கான சிறந்த இருபதுக்கு 20 அணி**

ஜோஸ் பட்லர் (தலைவர்), மொஹமட் ரிஸ்வான், விராட் கோஹ்லி, சூர்யகுமார் யாதவ், கிளேன் பிலிப்ஸ், சிக்கண்டர் ரஷா, ஹர்திக் பாண்டியா, செம் கரன், வனிந்து ஹசரங்க, ஹரிஸ் ரவூப், ஜோஸ் லிட்ல்.

# உதைபந்தாட்டப் போட்டியின் முதலாவது வெள்ளை அட்டை




(ரமணி)

போர்த்துகலில் நடைபெற்ற மகளிர் உதைபந்தாட்ட கிண்ணப் போட்டியில் முதன்முதலாக நடுவராக வெள்ளை அட்டை காண்பிக்கப்பட்டு வரலாற்றில் பதிவாகியுள்ளது. வெள்ளை அட்டை என்பது உதைபந்தாட்டத்தில் நியாயமான விளையாட்டு மற்றும் விளையாட்டுத்திறனை மேம்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு புதிய முயற்சியாகும். வெள்ளை அட்டையின் சரியான நோக்கம் மற்றும் அதை பெறுவதால் ஏற்படும் விளைவுகள் இன்னும் அறிவிக்கப்படவில்லை. மஞ்சள் அட்டைக்கு உத்தரவாதமளிக்காமல், அதிகாரிகளுக்கு எதிராக கருத்து வேறுபாடுகள் போன்ற விளையாட்டுத்தனமற்ற நடத்தையில் களத்தில் ஈடுபடும் வீரர்களுக்கு எச்சரிக்கையாக இது பயன்படுத்தப்படுகிறது.

ஜனவரி 21, சனிக்கிழமை போர்த்துகலில் நடந்த உதைபந்தாட்டப் போட்டியில் முதன்முறையாக வெள்ளை அட்டை வழங்கப்பட்டபோது அது ஒரு வரலாற்றுத் தருணம்.

கடுமையான போட்டியாளர்களான பென்பிகா , ஸ்போர்ட்டிங் லிஸ்பன் ஆகிய அணிகளுக்கு இடையிலான மகளிர் இறுதிப் போட்டியின்போது வெள்ளை அட்டை காட்டப்பட்டது. வெள்ளை அட்டை காட்டப்பட்டபோது 3-0 என பென்பிகா முன்னிலையில் இருந்தது. அப்போது ஒரு மாற்று வீரர் டக்அவுட்டில் உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால் ஆட்டம் தடைபங்பட்டது. இரு அணிகளைச் சேர்ந்த மருத்துவ ஊழியர்களும் வீரருக்கு உதவ விரைந்தனர்

பெண் நடுவர் கேடரினா காம்போஸ் இரு மருத்துவ அணிகளுக்கும் வெள்ளை அட்டையைக் காட்டினார், இது ரசிகர்களிடமிருந்து நேர்மறையான எதிர்வினையை சந்தித்தது. கால்பந்தில் வெள்ளை அட்டையின் முதல் பயன்பாடு இதுவாகும்.

1970 உலகக் கிண்ண விளையாட்டின் ஒரு பகுதியாக இருக்கும் மஞ்சள் மற்றும் சிவப்பு அட்டைகளை கால்பந்து ஆதரவாளர்கள் நன்கு அறிந்திருக்கிறார்கள். ஆனால், சமீபத்தில் பயன்படுத்தப்பட்ட வெள்ளை அட்டையின் முக்கியத்துவம் என்ன, பென்பிகா மற்றும் ஸ்போர்ட்டிங் லிஸ்பனுக்கு இடையிலான ஆட்டத்தின்போது அது ஏன் செயல்படுத்தப்பட்டது?

ஆடுகளத்தில் முன்மாதிரியான நடத்தையை வெளிப்படுத்தும் அணிகளுக்கு வெகுமதி அளிக்கும் வகையில், கால்பந்தாட்ட ரசிகர்கள் சமீபத்தில் வெள்ளை அட்டைகளுக்கு ஆளாகியுள்ளனர். இது நெறிமுறை நடைமுறைகளை ஊக்குவித்து விளையாட்டின் ஒட்டுமொத்த சூழலை மேம்படுத்தும் முயற்சியாகும். வெள்ளை அட்டை போர்த்துக்கலில் அறிமுகப்படுத்தப்பட்ட பல நடவடிக்கைகளின் ஒரு பகுதியாகும்.

நடுவர் அவரது சட்டைப் பையில் கை வைத்தபோது வீரர்கள் ஆரம்பத்தில் குழப்பமடைந்தனர். பொதுவாக, மோசமான நடத்தை வெளிப்படும்போது மட்டுமே அட்டைகள் விநியோகிக்கப்படும், ஆனால், இது எதிர்காலத்தில் மாறலாம். பென்பிகா 5-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்கு முன்னேறியது.

போர்த்துக்கலில் பெண்கள் உதைபந்தாட்டப் போட்டியைக் காண்பதற்கு 15,032 ரசிகர்கள் வந்திருந்தனர், இது கடந்த ஆண்டு மே மாதத்தில் காணப்பட்ட 14,221 ரசிகர்களின் முந்தைய சாதனையை முறியடித்தது.

# உலக ஹொக்கி காலிறுதியில் ஜேர்மனி, தென். கொரியா



(ரமணி)

இந்தியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச ஹொக்கி பெடரேஷன் ஆடவர் ஹொக்கி உலகக் காலிறுதியில் விளையாட ஜேர்மனியும் தென் கொரியாவும் தகுதி பெற்றன.

தென் கொரியா 5-5 என்ற கோல் கணக்கில் ஆர்ஜென்ரீனாவுக்கு எதிராக பெனால்டியில் வியத்தகு வெற்றியைப் பெற்றதன் மூலம் கடைசி எட்டு இடத்தைப் பிடித்தது. ஐந்து நிமிடங்கள் இருக்கும் நிலையில், தென் கொரியா நாம் யோங் லீ அடித்த லோ ஷாட் மூலம் போட்டியை பெனால்டிக்கு கொண்டுசென்றது.

தென் கொரியா ஷூட் அவுட்டில் 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. காலிறுதியில் நெதர்லாந்துடன் மோதுகிறது. இத்தொடரில் அமைத்து காலிறுதிக்கு முன்னேறிய ஒரே ஆசிய அணி என்ற பெருமையைப் பெற்றது.

தென் கொரியாவின் கீப்பர் ஜேஹியோன் கிம், மார்ட்டின் பெரிரோ மற்றும் லூகாஸ் டோஸ்கானி ஆகியோரின் முயற்சிகளை தடுத்தார். அதேநேரத்தில் ஜங் மஞ்சே, ஜி வூ சியோன் மற்றும் லீ ஜங்ஜுன் ஆகியோர் கோல் அடித்தனர்.

கிராஸ்ஓவர் ஆட்டத்தில் பிரான்ஸுக்கு எதிராக ஜேர்மனி 5-1 என்ற கோல் கணக்கில் எளிதாக வெற்றிபெற்றது. ஜேர்மனி இங்கிலாந்துடன் காலிறுதியில் மோதுகிறது.

# சீனன்கோட்டை யங் ஸன்ரைஸ் எகடமி இளம் வீரர்களுக்கு சீருடை கையளிப்பு

(பேருவளை பீ.எம்.முக்தார்)

பேருவளை சீனன்கோட்டை யங் ஸன்ரைஸ் எகடமியில் உதைபந்தாட்ட பயிற்சி பெறும் இளம் வீரர்களுக்கு சீருடை (ஜேஸி) கையளிக்கும் வைபவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நளீம் ஹாஜியார் விளையாட்டரங்கில் நடைபெற்றது. சீனன்கோட்டை ஹபீபா ஜெம்ஸ் நிறுவனம் 34 வீரர்களுக்கு சீருடைகளை அன்பளிப்புச் செய்துள்ளது.

ஹபீபா ஜெய்ஸ் பணிப்பாளர் அல்-ஹாஜ் சிராஸ் ஹனபி இவற்றை எகெடமியின் முகாமையாளர் ரிகாஸ் ஸாலி, ஸன்ரைஸ் கழக செயலாளர் கிஸான் ஹாஷிம் ஆகியோரிடம் கையளித்தார்.

அல்-ஹுமைஸரா தேசிய பாடசாலை உப அதிபர் ஏ.ரீ.எம்.நைஸர், எகடமி பயிற்சியாளர் பீ.ஜீ. பிரேமலால் (A.F.C-C-B தர அனுமதி பத்திரம் பெற்றவர்) ஹபீபா ஜெம்ஸ் பணிப்பாளர் இஷாம் ஹனபி உட்பட பலரும் நிகழ்வில் பங்குபற்றினர்.

சீனன்கோட்டையில் சிறந்த இளம் உதைபந்தாட்ட வீரர்களை உருவாக்கும் நோக்குடன் யங் ஸன்ரைஸ் எகடமி ஆரம்பிக்கப்பட்டதாகவும், தற்போது 35 பேருக்கு பயிற்சி வழங்கப்படுவதாகவும் எதிர்காலத்தில் மேலும் சிறுவர்கள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளதாகவும் முகாமையாளர் ரிகாஸ் ஸாலி தெரிவித்தார்.




# வீட்டில் செய்வினை இருப்பதாக தெரிவித்து

## பூஜைக்கு வைக்கப்பட்ட பணம், தங்க ஆபரணங்களை திருடிச் சென்ற போலி பெண் பூசாரி கைது

மட்டக்களப்பில் சம்பவம்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு நகர்ப்பகுதியிலுள்ள வீடொன்றில் செய்வினை இருப்பதாக தெரிவித்து பூஜை தட்டில் பணமும் தங்க ஆபரணமும் வைத்து பூஜை செய்து செய்வினையை அகற்றி தருவதாகக் கூறி பூஜை தட்டில் வைக்கப்பட்ட 60 ஆயிரம் ரூபா பணத்தையும் தங்க மோதிரம் ஒன்றையும் திருடிச் சென்ற கொக்கட்டிச்சோலை பிரதேசத்தைச் சேர்ந்த இளம் பெண் பூசாரி ஒருவரை மட்டக்களப்பு பொலிஸார் நேற்று செவ்வாய்க்கிழமை (24) கைதுசெய்துள்ளனர்.

கொக்கட்டிச்சோலை கடுக்காய்முனையைச் சேர்ந்த பெண் ஒருவர் கடந்த டிசம்பர் 22ஆம் திகதி மட்டக்களப்பு நகர்ப்பகுதியில் அறிமுகமானவர்களது வீட்டிற்குச் சென்றுள்ளார். இதன்போது அந்த வீட்டின் பகுதியில் செய்வினை செய்திருப்பதாகவும் தான் நாகக்கன்னி தெய்வம் ஆடி அதனை அகற்றித் தருவதாகவும் பெண் போலி பூசாரி தெரிவித்ததையடுத்து வீட்டின் உரிமையாளரும் பூஜை செய்ய உடன்பட்டுள்ளார்.

இதனையடுத்து சம்பவதினம் இரவு செய்வினையை அகற்றுவதற்கான பூஜை ஏற்பாடுகள் செய்யப்பட்டபோது பூஜை தட்டில் 60 ஆயிரம் ரூபா பணமும் தங்க ஆபரணங்களும் வைக்கவேண்டும் என கோரியதையடுத்து, அதனை பூஜை தட்டில் வைத்து வெள்ளை துணியால் மூடிகட்டியவாறு பூஜை அறையில் வைத்து பூஜை நடைபெற்று முடிந்துள்ளது.

அதன்பின்னர் பெண் போலி பூசாரி அந்த அறைக் கதவை மூடிவிட்டு கதவை 10 தினங்களுக்கு திறக்கக்கூடாது என்றும் அங்கு நாகக்கன்னி உலாவருவார் எனவும் 10 தினங்களின் பின்னர் தான் வந்து கதவைத் திறந்து துணியால் கட்டிவைக்கப்பட்ட பூஜைத்தட்டை அவிழ்த்து தருவதாக கூறி அங்கிருந்து சென்றுள்ளார்.

வீட்டின் உரிமையாளர் 10 நாட்கள் முடிந்ததும் போலி பூசாரியான அப்பெண்ணுக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தியபோது அந்த தொலைபேசி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதையடுத்து, பூஜை அறைக் கதவை திறந்துசென்று துணியால் கட்டி வைக்கப்பட்ட பூஜைத் தட்டை அவிழ்த்து பார்த்தபோது அங்கு தட்டில் வைக்கப்பட்ட 60 ஆயிரம் ரூபாவையும் தங்க மோதிரத்தையும் பெண் பூசாரி திருடிச்சென்றுள்ளமை தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் அளிக்கப்பட்ட முறைப்பாட்டை யடுத்து குறித்த போலி பெண் பூசாரியை நேற்று பொலிஸார் கைதுசெய்துள்ளனர். இவர் இவ்வாறு கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவில் பல வீடுகளில் செய்வினை இருப்பதாகவும் அதனை எடுத்துத் தருவதாக தெரிவித்து பணம், தங்க ஆபரணங்களை திருடிச்சென்ற 6இற்கும் மேற்பட்ட வழக்குகள் இருப்பதாகவும் இவரை விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

# குப்பையில் வீசப்பட்டிருந்த பெண் சிசு: 16 வயது பாடசாலை மாணவி கைது!

## ஏறாவூரில் சம்பவம்

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு, ஏறாவூர்ப் பிரதேசத்தில் குப்பையில் வீசப்பட்டிருந்த பெண் சிசுவின் சடலம் ஒன்று நேற்று (24) காலை மீட்கப்பட்டுள்ளதாகவும் இதுதொடர்பாக 16 வயது பாடசாலை மாணவியொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் ஏறாவூர்ப் பொலிஸார் தெரிவித்தனர்.

வீடொன்றின் மலசலகூடத்திற்கருகில் பை ஒன்றில் இடப்பட்டு சிசுவின் சடலம் ஒன்று வீசப்பட்டிருந்ததை அயலவர்கள் அவதானித்து பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்துள்ளனர். இந்நிலையில், விரைந்து சென்ற பொலிஸார், மேற்கொண்ட விசாரணையையடுத்து சந்தேகத்தின் பேரில் மாணவியை கைதுசெய்துள்ளனர்.


இவருக்கு வாலிபர் ஒருவருடன் காதல் தொடர்பு இருப்பதாகவும் இவரின் தந்தை மத்திய கிழக்கு நாடொன்றில் பணிபுரிவதாகவும் பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

இவர் அதிகாலைவேளை மலசலகூடத்தில் குழந்தையைப் பிரசவித்து மலசலகூடத்தின் காற்றோட்ட வழி ஊடாக வீசியிருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது.

சிசுவின் சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், இச்சம்பவம் ஏறாவூர் பிரதேசத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாலம் அமைத்துத் தர முடியாத இராஜாங்க அமைச்சர் தேவையில்லை

## பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன்







(மட்டக்களப்பு நிருபர்)

இரண்டு நாட்களுக்குள் பாலத்தை அமைத்துத் தர முடியாத இராஜாங்க அமைச்சர் மட்டக்களப்பிற்கு தேவையில்லை - என பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் தமிழ்த் தேசிய பொங்கல் விழா மட்டக்களப்பு - கிரான் வீதி விவேகானந்தா வித்தியாலயத்திற்கு அருகில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (21) இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நிலைக்கு காரணமானவர்கள் பலரும் மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிடுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சிறிநேசன், அரியநேத்திரன் உள்ளிட்ட தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்ட இந்நிகழ்வில், இலங்கை தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணி உறுப்புரிமையையும் அங்கத்துவத்தையும் மேலும் பல இளைஞர்கள் இதன்போது பெற்றுக்கொண்டனர்.

# மட்டக்களப்பு – ஏறாவூர் நகர சபை புதிய தவிசாளராக சுபைர் தெரிவு



(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு - ஏறாவூர் நகர சபையின் புதிய தவிசாளராக எம்.எஸ்.எம். சுபைர் திருவுளச்சீட்டு குலுக்கல் மூலமாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக செயலாளர் எம்.எச்.எம்.ஹமீம் தெரிவித்தார். மேலும் இவர் சபையின் மூன்றாவது தவிசாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

முன்னாள் தவிசாளர் எம்.எஸ்.நழீமினால் கடந்த மாதம் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட இவ்வாண்டிற்கான வரவு – செலவுத்திட்டம் தோற்கடிக்கப்பட்ட நிலையில், அவர் பதவியிழந்தார். இதையடுத்து, உள்ளூராட்சி ஆணையாளர் என். மணிவண்ணன் தலைமையில் புதிய தவிசாளர் தெரிவு நேற்று (24) நடைபெற்றது.

இதன்போது எம்.எஸ்.எம்.சுபைர் மற்றும் கே.இப்திகார் ஆகியோர் தவிசாளர் பதவிக்காக உறுப்பினர்களால் முன்மொழியப்பட்டனர். இம்முன்மொழிவு திறந்த வாக்கெடுப்பிற்கு விடப்பட்டபோது இருவருக்கும் தலா 08 வாக்குகள் கிடைக்கப்பெற்றதனால் திருவுளச்சீட்டு குலுக்கல் முறை பின்பற்றப்பட்ட நிலையில், முகமட் சரீப் முகமட் சுபைர் தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மேலும், இவர் கிழக்கு மாகாண சபையின் அமைச்சராகவும் தவிசாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

இதன்போது உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ். பிரகாஸ் சபையில் பிரசன்னமாயிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஏறாவூர் நகர சபையில் அங்கம் வகிக்கும் 17 உறுப்பினர்களில் 16 பேர் மாத்திரமே சபைக்கு சமுகமளித்திருந்தனர். ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இரு அணியாகப் போட்டியிட்டதன் விளைவாகவே இச்சபையை சுமுகமாக நடத்திச்செல்ல முடியாத துரதிர்ஷ்டநிலை காணப்படுவதாக புதிய தவிசாளர் சுபைர் தனது கன்னியுரையில் சுட்டிக்காட்டினார்.

# கண் சத்திர சிகிச்சைக்கான உபகரணங்கள் வழங்கிவைப்பு




(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கண் சத்திர சிகிச்சைக்கான உபகரணங்கள் வழங்கப்பட்டன. திருகோணமலை நகரில் இயங்கிவரும் "உதவும் கரங்கள் அமைப்பினால்" சிறுவர் வார்ட்டுக்கு (களம் 2) திரைச் சீலை மற்றும் கண் சத்திர சிகிச்சைக்கான பொருட்கள் வைத்திய அத்தியட்சகர் ஜகத் விக்ரமரத்னவிடம் அமைப்பின் தலைவர் அல்ஹாஜ்.எஸ்.எச்.அன்சாரால் வழங்கப்பட்டது.

இதன்போது உதவும் கரங்கள் அமைப்பின் அமைப்பாளரும், வைத்தியசாலை குழுவின் உறுப்பினருமான அல்ஹாஜ் ஏ.எஸ்.ஜவாஹிர் மற்றும் செயலாளர்.ஏ.ஆர்.றியாத் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# பொய்யான உறுதிமொழிகளை வழங்கி சேவை செய்யாதோரை விரட்டுவோம்

## வேட்பாளர் அமீன் ஹம்சாக்



கடந்த தேர்தல் காலங்களில் மக்களின் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுத்தருவதாக பொய்யான உறுதிமொழிகளை வழங்கிவிட்டு வெற்றிபெற்றுச் சென்ற பல கட்சிகளின் வேட்பாளர்களும், அக்கட்சிகளின் தலைமைகள் மீதும் பொதுமக்கள் பெரும் எதிர்ப்புகளைக் காட்டி அதிருப்தியையும் வெளியிட்டு வருவதை நாம் எல்லோரும் காணக்கூடியதாக இருக்கின்றது என்று தேச விடுதலை மக்கள் கட்சியின் அட்டாளைச்சேனை பிரதேச சபை புறத்தோட்ட வட்டார வேட்பாளர் அமீன் ஹம்சாக் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை புறத்தோட்ட வட்டார பிரதேச மக்களுடனான கலந்துரையாடல் நேற்று (24) காலை மீனோடைக்கட்டில் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் தேச விடுதலை மக்கள் கட்சியில் போட்டியிடுகின்ற அனைத்து வேட்பாளர்களும் இளம் வேட்பாளர்களாகவே இருக்கின்றனர். அவர்களுக்கு விளையாட்டுக் கழகங்கள், மகளிர் அமைப்புகள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், பல சமூக சேவை அமைப்புகள் போன்ற பல்வேறுபட்ட நிறுவனங்கள் ஆதரவுகளை வழங்கி வருகின்றன. அதனால் அம்பாறை மாவட்ட மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பும், ஆதரவையும் பெற்று வருகின்றோம்.

"மக்களுக்கான விடிவு - இளம் தலைமுறையினர்" என்று மக்கள் மத்தியில் பாரியதொரு ஆதரவு வரவேற்பலையைப்பெற்று வருகின்ற கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.எம்.எம்.முஷாரப் என்றும் மக்களின் விடிவுக்காக களத்தில் நின்று போராடி அவர்களின் பிரச்சினைகளுக்கு உடனுக்குடன் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்கின்றவராக இருக்கின்றார்.

எமது இளம் தலைவரின் கரத்தைப் பலப்படுத்த தேச விடுதலை மக்கள் கட்சிக்கு தங்களின் ஆதரவுகளை வழங்க பொதுமக்கள் தாமாகவே முன்வந்து கொண்டிருக்கின்றனர். மக்களின் நலனை அடிப்படையாகக் கொண்டு செயற்படும் கட்சியாகவும், வாக்குறுதிகளை நிறைவேற்றும் உறுப்பினர்களாகவும் நாங்கள் என்றும் செயற்படுவோம். மக்களின் திருப்தியைப்பெற்று, அவர்களுக்கு தீர்வினை பெற்றுக்கொடுப்பதே எங்களுடைய இலக்காகும். இதில் வெற்றிகொள்ள நாம் அனைவரும் ஒற்றுமையாக பயணிப்பதன் மூலமே எல்லாவிதமான பிரச்சினைகளுக்கும் தீர்வு காணமுடியும் என்றார்.

# படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் சுகிர்தராஜனின் 17ஆவது ஆண்டு நினைவு





(மட்டக்களப்பு நிருபர்)

திருகோணமலையில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் எஸ்.சுகிர்தராஜனின் 17ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று செவ்வாய்க்கிழமை (24) மட்டக்களப்பு காந்தி பூங்காவில் அமைந்துள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நினைவுத்தூபியில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டு. ஊடக அமையம் மற்றும் கிழக்கு மாகாண தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் என்பவற்றின் இணை ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்ட இந்நிகழ்வு சிரேஷ்ட ஊடகவியலாளர் பேரின்பராஜா தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாநகர பிரதி முதல்வர் க.சத்தியசீலன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், மாநகர சபை உறுப்பினர்களான சிவம் பாக்கியநாதன், க.இராஜேந்திரன், சிவில் செயற்பாட்டாளர் அருட்தந்தை கே.ஜெகதாஸன், மட்டக்களப்பு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் வா.கிருஸ்ணகுமார், கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் எல்.தேவதிரன் உட்பட ஊடகவியலாளர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், சிவில் செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது அமரர் சுகிர்தராஜனின் திருவுருவப் படத்திற்கு சிரேஷ்ட ஊடகவியலாளர் மற்றும் அருட்தந்தை ஆகியோரால் மலர்மாலை அணிவிக்கப்பட்டதுடன், வருகை தந்தோர் அனைவராலும் மலர்தூவி சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டு அஞ்சலியுரைகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் 238 பேரை தெரிவு செய்வதற்கு 3240 பேர் வேட்பு மனுத்தாக்கல்

## அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜா தெரிவிப்பு

(மட்டக்களப்பு நிருபர்)



மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு மாநகர சபை, 2 நகர சபை மற்றும் பிரதேச சபைகள் உட்பட 12 உள்ளூராட்சி மன்றங்களுக்கு 238 பேரை தெரிவுசெய்வதற்கு 18 கட்சிகள் மற்றும் 19 சுயேச்சைக் குழுக்கள் உட்பட 3,240 வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிட 145 வேட்பு மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலகருமான திருமதி கலாமதி பத்மராஜா தெரிவித்தார்.

அதில் இரண்டு அரசியல் கட்சிகள் நான்கு சுயேச்சைக் குழுக்கள் உட்பட 6 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (23) இடம்பெற்ற ஊடக மாநாட்டில் கலந்துகொண்ட அவர் மேலும் தெரிவிக்கையில்,

கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபையில் ஜனநாயக ஐக்கிய முன்னணி கட்சியும் முகமது உவைஸ் தலைமையிலான சுயேச்சைக் குழுவும் கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபையில் கதிர்காமத்தம்பி சந்திரமோகன், குமாரதாஸ விஜயதாஸ ஆகியோர் தலைமையிலான 2 சுயேச்சைக் குழுவும், மண்முனைப்பற்று பிரதேச சபையில் சோமசுந்தரம் மகேந்திரலிங்கம் தலைமையிலான சுயேச்சைக் குழுவும், போரதீவுப்பற்று பிரதேச சபையில் ஜனநாயக மக்கள் காங்கிரஸ் கட்சியும் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இதேபோன்று கோறளைப்பற்று பிரதேச சபையில் விமலசேன லவக்குமார் தலைமையிலான சுயேச்சைக் குழுவில் ஒருவரும், கோறளைப்பற்று வடக்கில் அகில இலங்கை தமிழர் மகாசபை 2 பேரும், காத்தான்குடி நகரசபையில் ஐக்கிய காங்கிரஸ் கட்சி வேட்பாளர் பட்டியலில் ஒருவரும், அதே நகர சபையில் தேசிய காங்கிரஸ் 11 பேரும், மட்டக்களப்பு மாநகர சபையில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ஒன்பது பேரும், மண்முனை தென்மேற்கு பிரதேச சபையில் தமிழர் விடுதலைக் கூட்டணியில் ஒருவரும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் 3 பேரும் நிராகரிக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாநகர சபையில் 33 உறுப்பினர்களை தெரிவுசெய்வதற்கு 15 கட்சி மற்றும் சுயேச்சைக் குழுக்களும், ஏறாவூர் நகர சபையில் 14 பேரை தெரிவு செய்வதற்கு 15 கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும், காத்தான்குடி நகரசபையில் 14 பேரை தெரிவுசெய்வதற்காக 13 கட்சிகள் சுயேச்சைக் குழுக்களும், ஏறாவூர்ப்பற்று பிரதேச சபையில் 30 பேரை தெரிவுசெய்வதற்கு 14 கட்சியும் சுயேச்சைக்குழுக்களும், கோறளைப்பற்று பிரதேச சபைக்கு 23 பேரை தெரிவு செய்வதற்காக 14 கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும், கோறளைப்பற்று மேற்கு 8 பேரை தெரிவு செய்வதற்கு 9 கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும், கோறளைப்பற்று வடக்கு பிரதேசசபைக்கு 18 பேரை தெரிவுசெய்வதற்காக 12 கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும், மண்முனை தென்எருவில்பற்று பிரதேச சபைக்கு 20 பேரை தெரிவு செய்வதற்காக 9 கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும், மண்முனைப்பற்று பிரதேச சபைக்கு 16 பேரை தெரிவு செய்வதற்காக 11 கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும், மண்முனை மேற்கு பிரதேச சபைக்கு 16 பேரை தெரிவு செய்வதற்காக 11 கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும், மண்முனை தென்மேற்கு பிரதேச சபைக்கு 16 பேரை தெரிவுசெய்வதற்காக 10 கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும், போரதீவுப்பற்று பிரதேச சபைக்கு 16 பேரை தெரிவுசெய்வதற்காக 6 கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களுமாக 238 பேரை தெரிவுசெய்வதற்காக 3240 பேர் போட்டியிடுவதாக அவர் தெரிவித்தார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கோறளைப்பற்று பிரதேச சபைத் தவிசாளராக கமலநேசன் 4 மேலதிக வாக்குகளால் தெரிவு

(வாழைச்சேனை நிருபர்)



கோறளைப்பற்று பிரதேச சபையின் தவிசாளராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் கனகரெத்தினம் கமலநேசன் பகிரங்க வாக்கெடுப்பின்போது 4 மேலதிக வாக்குகளால் தவிசாளராக தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக உள்ளூராட்சி ஆணையாளர் தெரிவித்தார்.

மேற்படி கூட்டம் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் நா.மணிவண்ணன் தலைமையில் நேற்று செவ்வாய்க்கிழமை (24) காலை சபை மண்டபத்தில் நடைபெற்றபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமர்வில் பல்வேறு கட்சிகளையும் சேர்ந்த 23 உறுப்பினர்கள் மண்டபத்துக்கு சமுகமளித்திருந்தனர். இதன்போது கூட்டத்திற்கு தேவையான நிறைவெண் இருப்பதனால் கூட்டத்தை தொடர்ந்து நடத்துவதற்கு உள்ளூராட்சி ஆணையாளர் அறிவித்ததோடு, தவிசாளருக்கான முன்மொழிவுகளையும் கோரினார். தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் சார்பில் கா.நடராசாவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் க.கமலநேசனும் தவிசாளர் பதவிக்காக முன்மொழியப்பட்டு வழிமொழியப்பட்டனர்.

இதன்போது நடைபெற்ற பகிரங்க வாக்கெடுப்பின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் முன்மொழியப்பட்ட க.கமலநேசனுக்கு 12 வாக்குகளும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி சார்பில் முன்மொழியப்பட்ட கா.நடராசாவுக்கு 8 வாக்குகளும் கிடைக்கப்பெற்றன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் 2 பேரும் ஐக்கிய தேசியக் கட்சியில் ஒருவரும் என 3 பேர் நடுநிலை வகித்தனர்.

கோறளைப்பற்று பிரதேச சபையானது, கடந்த காலத்தில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் ஆளுகைக்குள் இருந்துவந்தது. கடந்த ஜனவரி மாதம் 29ஆம் திகதியன்று நடைபெற்ற இரண்டாவது வரவு - செலவுத் திட்டம் தொடர்பான சபை அமர்வின்போது தவிசாளரால் சமர்ப்பிக்கப்பட்ட 2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் தோல்வியடைந்ததால் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் சார்பில் தவிசாளராக இருந்த திருமதி சோபா ஜெயரஞ்சித்தின் தவிசாளர் பதவி வரிதாக்கப்பட்டது. இன்றைய கூட்டத்திற்கு மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் எஸ்.பிரகாஸ், கிழக்கு மாகாண ஆய்வு உத்தியோகத்தர் என்.ஐங்கரன் ஆகியோர் நிர்வாக உத்தியோகத்தர்களாக கடமையாற்றினார்கள்.

## போடியார் புலம்பல்!



***உள்ளூராட்சி தேர்தல எப்படியாவது நிறுத்தவேண்டும் எண்டு பல முயற்சிகள் எடுத்தும் நரிலுக்கு கைகூடல்ல எலுவா..?***

***சிலவேள கொரோனா வைரஸ கொள்வனவு செய்ய சீனாவுக்கு ஆரும் அமைச்சர்கள அனுப்பினாலும் ஆச்சரியமில்ல.***

***கடசி முயற்சி கொவிட் வைரஸ வரவழைக்கிற முயற்சி இதுவாகத்தான் இருக்கும்போல!***

# சிலோன் மீடியா போரத்தின் ஊடகச் செயலமர்வும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும்







(கல்முனை நிருபர்)

சிலோன் மீடியா போரத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இளையோருக்கான இருநாள் ஊடக செயலமர்வின் இறுதிநாள் செயலமர்வும் அதில் கலந்துகொண்டோருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் ஞாயிற்றுக்கிழமை(22) மாளிகைக்காடு பாவா றோயலி மண்டபத்தில் நடைபெற்றது.

சிலோன் மீடியா போரத்தின் தலைவர் கலாநிதி றியாத் ஏ.மஜீத் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஷம்ஸ் மகா வித்தியாலயத்தின் அதிபர் எம்.சீ.றிப்கா அன்ஸார் கலந்துகொண்டார்.

மேலும், இதில் கலந்துகொண்ட 37 இளைஞர், யுவதிகளுக்கு அதிதிகளால் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் விசேட அம்சமாக சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி பிரதேச அடிப்படை அமைப்புக்குப் பொறுப்பான அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எப்.றிகாஸா ஷர்பீனின் புதுமையான சிந்தனையில் உதித்த "பெண்களை ஊடகத்துறையில் வலுப்படுத்தல்" எனும் திட்டத்தினூடாக சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்களிலுள்ள பாடசாலை மாணவிகளையும் ஊடகத்துறைக்குள் உள்வாங்கும் அவரது சிந்தனையையும் முயற்சியையும் பாராட்டி இதன்போது சிலோன் மீடியா போரத்தின் பிரதிநிதிகள் உள்ளிட்ட அதிதிகளால் பாராட்டுச் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

# போதைப்பொருள் தயாரிப்பாளர்களால் எமது நாடு கையாளப்படுவது கவலையளிக்கிறது

## ஓட்டமாவடி பிரதேச செயலக பிரதித் திட்டப் பணிப்பாளர் றியாஸ்

(கல்குடா நிருபர்)




போதைப்பொருள் தயாரிப்பாளர்கள் மற்றும் விற்பனையாளர்களால் கையாளப்படுகின்ற நாடாக எமது நாடு மாறியிருப்பது கவலையான விடயம் - என்று ஓட்டமாவடி பிரதேச செயலகத்தின் பிரதித் திட்டப் பணிப்பாளர் எஸ்.ஏ.றியாஸ் தெரிவித்தார்.

ஓட்டமாவடி ஹீரோலைன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் போதையிலிருந்து இளைஞர்களை பாதுகாப்போம் எனும் தொனிப்பொருளிலான கருத்தரங்கும் ஓட்டமாவடி ஹன்ஸா அரிசி ஆலை வளாகத்தில் கழகத்தின் தலைவர் எஸ்.எல்.நளீர் தலைமையில் நேற்றுமுன்தினம் (23) இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

போதைப்பொருட்களை விற்பனை செய்பவர்கள் தங்களது விற்பனையை அதிகரித்துக்கொள்வதற்காக தற்போது மாணவர்களையும் இளைஞர்களையும் அடையாளப்படுத்தி செயல்படுகின்றனர். இதிலிருந்து நாம் ஒவ்வொருவரும் எவ்வாறு தவிர்ந்துகொள்வது என்பதுதான் இன்று எம் மத்தியில் உள்ள முக்கியமான பொறுப்பாகும். போதைப்பொருட்களை தயாரிப்பதற்கு பயன்படுத்தக்கூடிய இரசாயனப் பொருட்களில் நரம்பு மண்டலத்தைப் பாதிக்கின்ற பொருட்கள்தான் அதிகமாக இருக்கின்றன. நாம் ஒவ்வொருவரும் அதிலிருந்து எம்மை பாதுகாத்துக்கொள்வதுடன் நம்மை சூழவுள்ளவர்களையும் பாதுகாக்கக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.







**வாழைச்சேனை கோறளைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட விநாயகபுரம் பவள மல்லிகை முன்பள்ளியில் பொங்கல் விழா கொண்டாட்ட நிகழ்வுகள் நேற்று முன்தினம் (23) நடைபெற்றன. முன்பள்ளி ஆசிரியர் திருமதி கா.கவிதா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதேச அபிவிருத்தி வங்கி வாழைச்சேனை கிளையினால் பரிசில்களும் சேமிப்பு பழக்கத்தை தூண்டுவதற்கான உண்டியல்களும் இதன்போது வழங்கப்பட்டன.**

**(வாழைச்சேனை நிருபர்)**

# உலக செய்திகள்

# துப்பாக்கிச்சூடுகளால் அதிர்ந்த அமெரிக்கா




## 3 சம்பவங்களில் 2 மாணவர்கள் உட்பட 9 பேர் பலி





அமெரிக்காவில் அடுத்தடுத்து நடைபெற்ற 3 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களில் பாடசாலை மாணவர்கள் இருவர் உட்பட 9 பேர் பலியாகியுள்ளனர்.

லொஸ் ஏஞ்சல்ஸில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற சீன புத்தாண்டுக் கொண்டாட்ட நிகழ்ச்சியில் நிகழ்த்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் 11 பேர் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவம் நடைபெற்று 48 மணிநேரத்தை கடப்பதற்குள், அங்கு மேலும் 3 இடங்களில் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

அயோவாவிலுள்ள டெஸ் மொயின்ஸ் ஸ்டார்ட்ஸ் ரைட் ஹியர் பாடசாலையில் நிகழ்த்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் 2 மாணவர்கள் உயிரிழந்தனர். மேலும், பாடசாலையில் சிஇஓ உள்ளிட்ட 3 பேர் பலத்த காயமடைந்தனர்.

கலிபோர்னியா மாகாணத்தில் இருவேறு பண்ணைகளில் நிகழ்த்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் சீன தொழிலாளர்கள் 7 பேர் கொல்லப்பட்டனர். அவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்திய ஜாவோ சுன்லி என்ற முதியவரை பிடித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# இந்திய குடியரசு தினம்: உணவில் மூவர்ணம்!






இந்திய குடியரசு தினம் நாளை (26ஆம் திகதி) கொண்டாடப்படவுள்ளது.

1950ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த திகதியைக் குறிக்கும் வகையில் ஜனவரி 26ஆம் திகதி கொண்டாடப்படுகிறது.

இந்தியாவில் எந்தவொரு கொண்டாட்டமும் சிறப்பு உணவுகள் இல்லாமல் நிறைவடையாது. அந்தவகையில் இவ்வருட குடியரசு தினத்துக்காக சில உணவு வகைகள் மூவர்ணங்களுடன் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

# அமெரிக்க நீதிமன்றில் ஆஜராகும் உலகின் முதல் ரோபோ வழக்கறிஞர்



உலகின் முதல் ரொபோ வழக்கறிஞர், அமெரிக்க நீதிமன்றத்தில் அடுத்த மாதம் ஆஜராகி வாதாடவுள்ளது.

லண்டனைச் சேர்ந்தவரான 26 வயதுடைய ஜோஸ்வா பிரவுடர், டுநொட்பே (DoNotPay) என்ற சட்ட ஆலோசனை வழங்கும் நிறுவனத்தை நடத்திவருகிறார். அமெரிக்கா மற்றும் பிரித்தானியாவில் செயற்படும் இந்த நிறுவனம், உலகில் முதன்முறையாக செயற்கை நுண்ணறிவு மூலம் செயல்படும் ரொபோ வழக்கறிஞரை உருவாக்கியுள்ளது.

அமெரிக்க நீதிமன்றத்தில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் நடைபெறும் முக்கிய வழக்கு விசாரணையில் ரொபோ வழக்கறிஞர் ஆஜராகி, மனுதாரருக்காக வாதாடவுள்ளது. எந்த நீதிமன்றம், யாருடைய வழக்கு, எந்தத் திகதியில் விசாரணை நடைபெறுகிறது என்பன உள்ளிட்ட விவரங்கள் வெளியிடப்படவில்லை.

பெரும்பாலான அமெரிக்க நீதிமன்றங்களில் ஸ்மார்ட்போன்கள் உள்ளிட்ட மின் சாதனங்களுக்கு அனுமதி கிடையாது. குறிப்பாக, அமெரிக்க உயர் நீதிமன்றத்தில் அனைத்து வகையான மின்னணு சாதனங்களுக்கும் தடை விதிக்கப் பட்டிருக்கிறது.

இந்தச் சூழலில் அமெரிக்க நீதிமன்றம் ஒன்றில் ரொபோ வழக்கறிஞர் எவ்வாறு அனுமதிக்கப்படும் என்று சட்ட நிபுணர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். இதுகுறித்து டுநொட்பே நிறுவன வட்டாரங்கள் தெரிவிக்கையில், "சட்ட விதிகளுக்கு உட்பட்டே ரொபோ வழக்கறிஞர் ஆஜராகி வாதாடும்" என்று விளக்கமளிக்கப்பட்டிருக்கிறது.

# துருக்கி ஜனாதிபதி தேர்தல் மே 14இல்



## மீண்டும் தையீப் எர்டோகன் போட்டி

துருக்கியில் எதிர்வரும் மே 14ஆம் திகதி பாராளுமன்றத் தேர்தலும், ஜனாதிபதித் தேர்தலும் நடைபெறவுள்ளன.

பாடசாலை பரீட்சைகளை முன்னிட்டு, ஒரு மாதம் முன்கூட்டியே தேர்தல் நடத்தப்படவுள்ளதாக ஜனாதிபதி தையீப் எர்டோகன் தெரிவித்துள்ளார்.

2003ஆம் ஆண்டுமுதல் பிரதமராகவும், 2014ஆம் ஆண்டுமுதல் ஜனாதிபதியாகவும் பதவி வகித்துவரும் எர்டோகன் மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் களம் காண்கிறார். விலைவாசி உயர்வை முன்னிட்டு மக்கள் மத்தியில் நிலவிவரும் அதிருப்தியால் இந்தத் தேர்தல் அவருக்கு பெரும் சவாலாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**குர்ஆன் எரிப்புப் போராட்டத்துக்கு கண்டனம்**


இதேவேளை, "இஸ்லாமியரின் புனிதநூல் எரிப்புப் போராட்டத்துக்கு அனுமதி கொடுத்த சுவீடன் அரசு நேட்டோ உறுப்பினருக்கான ஆதரவை எதிர்பார்க்கக்கூடாது" என துருக்கி ஜனாதிபதி தையீப் எர்டோகன் தெரிவித்துள்ளார்.

சுவீடனில் நடைபெற்ற புனிதநூல் (குர்ஆன்) எரிப்புப் போராட்டத்துக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள எர்டோகன், இது அனைவருக்கும் குறிப்பாக, இஸ்லாமியர்களுக்கு அவமானம் என்றும் இந்தப் போராட்டத்துக்கு அனுமதியளித்த சுவீடன் அதிகாரிகளையும் கடுமையாக விமர்சித்துள்ளார்.

துருக்கி அல்லது இஸ்லாமியர்களுக்கு சுவீடன் மரியாதை கொடுக்கவில்லை என்றால் நேட்டோ விவகாரத்தில் தங்களிடமிருந்து எந்த ஆதரவையும் பெற முடியாது என்றும் எர்டோகன் கடுமையாக விமர்சித்துள்ளார்.

# அன்பான, புத்திசாலியான பெண் கிடைத்தால்

## திருமணம் செய்துகொள்வேன்



"அன்பான, புத்திசாலியான பெண் கிடைத்தால் திருமணம் செய்துகொள்ளத் தயார்" என காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

பேட்டியொன்றின்போது திருமணம் குறித்து ராகுல் காந்தியிடம் கேள்வி எழுப்பப்பட்டபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும், தன்னைத் திருமணம் செய்து கொள்ளும் பெண் குறைந்தபட்சம் இரண்டு குணாதிசயங்களுடன் இருக்க வேண்டும். அந்தப் பெண் தனது தாயார் சோனியா மற்றும் பாட்டி இந்திராவின் குணநலன்களைக் கொண்டிருக்க வேண்டும் என ராகுல் முந்தைய பேட்டியொன்றில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உக்ரைன் போர் முடிவுக்கு வராமைக்கு மேற்கத்தேய நாடுகளே காரணம்

## ரஷ்யா குற்றச்சாட்டு



"உக்ரைன் போர் முடிவடையாமலிருப்பதற்கு மேற்கத்தேய நாடுகளே காரணம்" என ரஷ்யா குற்றஞ்காட்டியுள்ளது.

தென்னாபிரிக்கா சென்றுள்ள ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்கி லாரோவ், அந்த நாட்டின் வெளியுறவு அமைச்சர் நலீதி பந்தரை சந்தித்துப் பேச்சு நடத்தினார். தென்னாபிரிக்காவின் நிர்வாகத் தலைநகரான பிரிடோரியாவில் நடைபெற்ற இந்தப் பேச்சுவார்த்தையை அடுத்து செர்கி லாரோவ் செய்தியாளர்களைச் சந்தித்தார். கடந்த ஆண்டு பெப்ரவரி 24ஆம் திகதி தொடங்கிய உக்ரைன் போர் ஓராண்டை நிறைவுசெய்யவுள்ள நிலையில், அது எப்போது முடிவுக்கு வரும் என செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த செர்கி லாரோவ், போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ஒப்பந்தத்தை மேற்கொள்ள கடந்த ஆண்டு மார்ச் மாதமே ரஷ்யா முன்வந்தது. போரை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்ற உக்ரைனின் கோரிக்கையை ஏற்று அதற்கான பேச்சுவார்த்தைக்கு நாங்கள் ஆதரவு தெரிவித்தோம். மோதலை முடிவுக்குக் கொண்டுவர இரு தரப்புமே ஒப்புக்கொண்டோம்.

ஆனால், அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய நாடுகள் இப்போதே ஒப்பந்தத்ததை ஏற்படுத்திக்கொள்ள வேண்டாம் என உக்ரைனுக்கு நெருக்கடி கொடுத்தன. இது எல்லோருக்குமே தெரியும். ஒப்பந்தத்தை உக்ரைன் ஏறக்குறைய ஏற்றுக்கொண்டது. இந்நிலையில்தான், உக்ரைனும் மேற்கத்தேய நாடுகளும் சேர்ந்து ரஷ்யாவுக்கு நிபந்தனை விதித்தன. எத்தகைய உடன்பாட்டையும் ஏற்பதாக ரஷ்யா ஒப்புக்கொள்ள வேண்டும் என அவர்கள் நிபந்தனை விதித்தார்கள். நாங்கள் இதனை தொடர்ந்து நிராகரித்து வருகிறோம்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுடன் பேச்சு நடத்த விரும்புவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்தார். போரை முடிவுக்குக் கொண்டுவர உண்மையான விருப்பம் இருக்குமானால், பேச்சுக்குத் தயார் என புட்டினும் தெரிவித்திருக்கிறார்" - என தெரிவித்தார்.




# வாழ்வை உயர்த்திய தன்னம்பிக்(கை)

அமெரிக்காவைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி தடகள வீரரான சீயோன் கிளார்க்கின், கின்னஸ் சாதனை குறித்த வீடியோவை கின்னஸ் நிறுவனம் வெளியிட்டுள்ளது.

பிறக்கும்போதே இரண்டு கால்கள் இல்லாமல் பிறந்த கிளார்க், கைகளால் வேகமாக நடக்கும் பயிற்சி மேற்கொண்டு, தனது விடாமுயற்சியால் தடகளத்தில் கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

கடந்த 2021ஆம் ஆண்டு 20 மீற்றர் தூரத்தை 4.78 விநாடிகளில் கடந்து, கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பெற்றார்.

# இந்திய கடற்படையில் இணைந்த ஐஎன்எஸ் வகிர்




இந்திய கடற்படையில் ஐஎன்எஸ் வகிர் என்ற புதிய நீர்மூழ்கிக் கப்பலொன்று சேர்க்கப்பட்டுள்ளது.

இந்திய கடற்படையில் தற்போது 150இற்கும் மேற்பட்ட போர்க்கப்பல்களும், 17 நீர்மூழ்கிக் கப்பல்களும் உள்ளன. இதில் 2 நீர்மூழ்கிக் கப்பல்கள் அணு ஆயுத தாக்குதல் நடத்தும் திறன் கொண்டவை.

கடந்த 2005ஆம்ஆண்டில் பிரான்ஸின் நேவல் குரூப் நிறுவனத்துடன் இணைந்து 6 புதிய நீர்மூழ்கிக் கப்பல்களை தயாரிக்க மத்திய அரசு ஒப்பந்தம் செய்தது. இதன்படி கடந்த 2007ஆம் ஆண்டில் மும்பை கட்டுமான தளத்தில் நீர்மூழ்கிக் கப்பல்களை தயாரிக்கும் பணி தொடங்கியது.

முதல் நீர்மூழ்கியான ஐஎன்எஸ் கல்வாரி கப்பல் 201ஆம் ஆண்டு கடற்படையில் சேர்க்கப்பட்டது. 2019இல் ஐஎன்எஸ் காந்தேரி, 2021ஆம்ஆண்டில் ஐஎன்எஸ் கரஞ்ச், ஐஎன்எஸ் வேலா ஆகியவை அடுத்தடுத்து கடற்படையில் இணைக்கப்பட்டன.

இந்த வரிசையில் 5ஆவது நீர்மூழ்கியான ஐஎன்எஸ் வகிர் நேற்றுமுன்தினம் கடற்படையில் சேர்க்கப்பட்டுள்ளது.

# 'அவதார் 2' உலகம் முழுவதும் 2 பில்லியன் டொலர் வசூல்



உலகம் முழுவதும் 'அவதார் 2' திரைப்படம் 2 பில்லியன் அமெரிக்க டொலர் வசூலித்து சாதனை படைத்துள்ளது.

2009ஆம் ஆண்டில் 'அவதார்' படம் திரைக்கு வந்தது. இந்தப் படம் உலகளவில் பெரும் வசூலை குவித்து, அனைத்து படங்களின் சாதனைகளையும் முறியடித்தது. இதையடுத்து 'அவெஞ்சர்ஸ் எண்ட் கேம்', அதையடுத்து 'ஸ்பைடர் மேன் நோ வே ஹோம்' படங்கள் அதிக வசூலை குவித்த படங்களின் பட்டியலில் இடம்பெற்றிருந்தன. இந்நிலையில், 'அவதார்' படத்தின் இரண்டாம் பாகம் கடந்த டிசம்பர் 16ஆம் திகதி திரைக்கு வந்தது.

இந்தப் படம் உலகம் முழுவதும் 2 பில்லியன் வசூலை குவித்திருக்கிறது. அமெரிக்காவில் மட்டும் 572 மில்லியன் வசூலித்திருக்கிறது. அமெரிக்கா தவிர, ஏனைய உலக நாடுகளில் 1.35 பில்லியன் வரை வசூலித்து சாதித்துள்ளது. இந்த படம் 'ஸ்பைடர்மேன் நோ வே ஹோம்' படத்தின் உலகளவிலான வசூலை தாண்டியிருக்கிறது. இதன்மூலம் அவேஞ்சர்ஸ் வசூலையும் நெருங்கியுள்ளது. இந்தியாவில் இப்படம் ரூ. 370 கோடியை ஈட்டியிருக்கிறது.

'அவதார் 2' படம் வெற்றிபெற்றால்தான் 'அவதார் 3' மற்றும் 4 பாகங்களை எடுப்பேன் என இயக்குநர் ஜேம்ஸ் கெமரூன் தெரிவித்திருந்தார். இப்போது படம் பெரிய வெற்றியை தக்கவைத்திருக்கிறது. இதனால் 3ஆவது மற்றும் 4ஆவது பாகத்தை உருவாக்கும் பணியில் ஜேம்ஸ் கெமரூன் ஈடுபட்டுள்ளார்.

# இனி ஊசி வழி, நாசி வழி இல்லை; அப்படியே சாப்பிடலாம்



ஊசி வழி, நாசி வழி கொரோனா தடுப்பூசிக்குப் பதிலாக புதிய முறையை அறிமுகப்படுத்த மருத்துவ நிபுணர்கள் தயாராகயுள்ளனர்.

இதன்படி, அப்படியே சாப்பிட லாம் என்பதுபோல் கொரோனா மருந்துகளை வாய் வழியே எடுத்துக்கொள் வதற்கான முயற்சியை மருத்துவ நிபுணர்கள் விரிவுபடுத்தியுள்ளனர். உலகம் முழுவதும் 3 ஆண்டுகளாக கொரோனா பெருந்தொற்று பொதுமக்களை அச்சுறுத்தி வருகிறது. எனினும், கடந்த சில மாதங்களாக சீனா, அமெரிக்கா, பிரேஸில் உள்ளிட்ட நாடுகளில் டெல்டா பிளஸ் மற்றும் ஓமிக்ரொன் உள்ளிட்ட உருமாற்றம் அடைந்த கொரோனாவின் பரவல் அதிகரித்தே காணப்படுகிறது. தொற்றைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளில் ஒன்றாக கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகிறது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7